Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 24 வியாழக்கிழமை (06-04-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:113

# பளை மக்கள் வெளியேற அனுமதிக்குமாறு அழுத்தம்!

## ஆயரும் கடிதம்

யாழ்ப்பாணம், ஏப். 6

பளையில் சிக்கியுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல உதவுமாறு கோரும் அவசரக் கடிதம் ஒன்றைத் தென்னிந்திய திருச்சபையின் யாழ்.ஆயர் வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

"இந்த மக்களைப் பணயக் கைதிகளாகவைத்திருப்பது உங்கள் எண்ணமல்ல என்று நினைக்கிறேன். இந்த மக்கள் போரினால் ஏற்கனவே அதிகம் பாதிக்கப்பட்டு விட்டார்கள்" - என்றும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(உ-5)

## கட்சிகள், பொது அமைப்புக்கள் நெருக்குதல் கொடுக்க முடிவு

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 6

**யுத்தம் தீவிரமடைந்துள்ள பளை உள்ளிட்ட பச்சிலைப்பள்ளிப் பகுதியில் சிக்கியுள்ள சுமார் ஐயாயிரம் பொதுமக்களை அங்கிருந்து வெளியேற அனுமதிக்குமாறு அழுத்தம் கொடுப்பதில் கட்சிகள், பொதுஅமைப்புகள் தீவிரம் காட்டிவருகின்றன.**

இந்த விடயத்தில் அரச மற்றும் இராணுவத்தரப்பு தொடர்ந்தும் உதாசீனமான போக்கில் பதில் தந்தால் இவ்விவகாரத்தை மக்கள் போராட்டமாக முன்னெடுக்கவும் பலதரப்புகளிலும் முயற்சி எடுக்கப்படுவதாகத் தெரிகிறது. இந்த மக்களை வெளியேற விடாது தடுத்து வைத்திருக்கும் நடவடிக்கையை சர்வதேச உலகுக்கு அம்பலப்படுத்த வேண்டிய பொதுக் கடப்பாட்டில் இருந்து விலகி நடப்பதாக குடாநாட்டில் செயற்படும் சர்வதேச தொண்டர் அமைப்புகளுக்கு எதிராகவும் கடும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

## செயலகம் முன் இன்று மறியல்

பச்சிலைப்பள்ளி மக்கள் யுத்தப் பிரதேசத்திலிருந்து வெளியேறுவதற்கு அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி யாழ்.செயலகம் முன்பாக இன்று காலை 7 மணிமுதல் 9 மணி வரை இரண்டு மணி நேரம் மறியற் போராட்டம் நடைபெறவுள்ளது.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் ஏற்பாட்டில் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் உட்பட நாற்பது பொது அமைப்புக்களினால் இந்த மறியற் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இது விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரி யாழ்.அரச அதிபர் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் ஆகியவற்றின் யாழ். வதிவிடப் பிரதிநிதிகள் போன்றோரிடம் மறியற் போராட்டத்தின் இறுதியில் மகஜர்கள் சமர்ப்பிக்கப்படும். இந்த மகஜர்களுக்கு சரியான பதில் கிடைக்காது விட்டால் நாளை தொடக்கம் சுழற்சி முறையில் யாழ்.செயலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும் என்று சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

இந்த விவகாரம் குறித்து நேற்று யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் விசேட கூட்டமொன்று நடைபெற்றது. அங்கு மறியற் போராட்டத்திற்கு ஆதரவாக தீர்மானம் எடுக்கப்பட்டது. (உ-5-10)

## மக்களை மனித கேடயமாக பயன்படுத்துவது கொடூரம்

### கூட்டணி சங்கரி ஜனாதிபதிக்குக் கடிதம்

"அப்பாவிப் பொதுமக்களை - பெண்கள், சிறுவர்களை - படையினர் மனித கேடயமாகப் பயன்படுத்துவது மிகக் கொடூரமானது." - தமிழர்விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று அனுப்பிய அவசரக் கடிதத்தில் இப்படித் தெரிவித்துள்ளார்.பளையிலும், கிளாலியிலும் பொதுமக்கள் படும் அவலங்களைத் தமது கடிதத்தில் விவரித்துள்ள ஆனந்தசங்கரி, அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறும் கோரியுள்ளார். (உ)

## பளையில் சிக்குண்டுள்ளோர் பெரும் ஆபத்து நிலையில்!

### சர்வதேச தலையீட்டை கோருகிறது ரெலோ

"பளை, கிளாலிப் பகுதியில் சிக்கியுள்ள சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் மனித கேடயம் ஒன்றை ஏற்படுத்துவதற்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இந்தப் பொது மக்கள் எந்நேரமும் கொல்லப்படவோ அல்லது காயமடையவோ கூடிய பாரதூரமான ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். - இப்படி ரெலோ முதல்வர் ந.சிறீகாந்தா நேற்று விடுத்த பகிரங்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"தற்காப்பு எதுவுமற்ற இப்பிரஜைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக - போர் நிகழும் பிரதேசத்தை விட்டு வெளியேறுவதற்கு இவர்கள் அனைவரையும் உடனடியாக அனுமதிக்க வேண்டிய அரசியல் சாசன ரீதியிலான பொறுப்பையும்,தார்மீகக் கடமையையும் சிறீலங்கா அரசுக்கு உணர்த்துமாறு சர்வதேசச் சமூகத்துக்கு தயவாகவும், அவசரமாகவும் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்" - என்றும் அதில் அவர் தெரிவித்துள்ளார். (உ-ரி)

## மருத்துவக் குழு விஜயம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

பிரான்ஸ் மருத்துவக் குழுவைச் (எம்.எஸ்.எவ்.) சேர்ந்த இரு டாக்டர்கள் கிளாலியில் சிக்கியுள்ள - இடம்பெயர்ந்த - மக்களை நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். ஜமுனானந்தாவும் நேற்று அங்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டார். (உ-5)

## ஷெல்லினால் பலி!

யாழ்ப்பாணம்,ஏப்.6

செம்பியன்பற்று யூதாதேயு தேவாலயப் பகுதியில் நேற்று வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மூன்று பெண்கள் உட்பட நான்கு பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர். மேலும் 11பேர் காயமடைந்தனர்.

செய்தி ஏஜென்ஸி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

பி.லலிதா(வயது 39),ரீ.கணபதிப்பிள்ளை(வயது75),கோ.வள்ளிப்பிள்ளை (வயது 70) ரீ.லிம்சித்தா (வயது46)ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். (உ-6-9)

## பல்கலை மாணவருக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ். பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களைச் சேர்ந்த மாணவர்களையும் இன்று காலை 7 மணிக்கு கைலாசபதி கலையரங்கின் முன்றிலில் ஒன்றுகூடுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்த அறிவிப்பில் உங்கள் ஒவ்வொருவரதும் பங்களிப்பும் இன்றைய நெருக்கடி நிலையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் தவறாது சமுகம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## குண்டு வீச்சில் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

கிளிநொச்சியில் திருவையாறு 2ஆம் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் கிபிர் குண்டு வீச்சு விமானம் ஒன்று நடத்திய தாக்குதலில் அப்பகுதியைச் சேர்ந்த ஞானமுத்து பாப்பா (வயது 60) என்பவர் படுகாயமடைந்தார்.

இவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருக்கிறார். (உ-9)

## சண்டிலிப்பாயில் ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.6

மானிப்பாய் தொடக்கம் இளவாலை வரையுள்ள சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாளை வெள்ளிக்கிழமை மட்டும் இரவு 11மணிவரை ஊரடங்கு தளர்த்தப்பட்டிருக்கும்.

அன்று இரவு 7 மணி முதல் இளவாலையில் நடைபெறும் 'திருப்பாடுகளின் காட்சி' கிறிஸ்தவ நிகழ்ச்சியை ஒட்டியே இந்த ஊரடங்குத் தளர்வு எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## கிளாலியில் உள்ளோரை விடுவிப்பதற்கு இணக்கம்?

யாழ்ப்பாணம்,ஏப்.6

கிளாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களை மட்டும் விசாரணை நடத்திய பின்னர் (Screening) இன்று பாதுகாப்பான இடங்களுக்குச்செல்ல அனுமதிப்பதற்கு யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்ன இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இது குறித்து அவருடனநேற்றுத் தொடர்புகொண்டு பேச்சு நடத்தியதை அடுத்து அவர் இணக்கம் தெரிவித்ததாக அக்கட்சி வட்டாரங்கள் நேற்றிரவு தகவல் வெளியிட்டன.

இதே போன்ற உறுதிமொழி படைத்தரப்பால் யாழ். ஆயருக்கும், ஆயர் இல்ல வண.பிதாக்களுக்கும் சில தினங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது செயலுருப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## கண்டி வீதியில் உக்கிரச்சமர்!

யாழ்ப்பாணம்,ஏப்.6

கண்டி வீதியில் புலிகள் நிலைகொண்டுள்ள முகாலைப் பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணி முதல் சுமார் 4மணிநேர உக்கிரச்சமர் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினருக்கு உதவியாக ஹெலிகளும் குண்டு வீச்சு விமானங்களும் அகோரத் தாக்குதல்களை நடத்தின.

நேற்றைய சண்டையில் ஏற்பட்ட சேத விவரங்கள் இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை கிடைக்கவில்லை. (உ-6-9-31)

## கப்பல் பயணிகளை இன்று வருகை தருமாறு அழைப்பு

### 'லங்கா முடித்த' நாளை புறப்படும்

யாழ்ப்பாணம்,ஏப்.6

"லங்கா முடித்த" கப்பல் நாளை வெள்ளிக்கிழமை காங்கேசன் துறையிலிருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் திருகோணமலை நோக்கிப் புறப்படவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி கப்பலில் பயணம் செய்பவர்கள் இன்று வியாழக்கிழமை காலை 8-30மணிக்கு சிங்கள மகாவித்தியாலய மைதானத்துக்கு பயண ஏற்பாடுகளுடன் சமுகம்தர வேண்டும் எனவும் -

பயணத்துக்கான டிக்கெட்டுக்கள்யாவும் அங்கு வைத்து விநியோகிக்கப்படும் எனவும் -

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்து வந்து மீண்டும் கொழும்பு செல்ல முடியாதிருப்போர் மற்றும் அவசர தேவைகளுக்காக கொழும்பு செல்லவிருப்போர் மற்றும் விமான டிக்கெட் வைத்திருப்போருக்கு பயணத்தில் முன்னுரிமை அளிக்கப்படும் எனவும்-

நாளை இடம்பெறும் சேவையைத்தவிர மேலும் இரண்டு சேவைகள் இடம்பெறும் எனவும்-

நாளைய சேவைகளுக்கான டிக்கெட்டுக்கள் இன்று காலை 8.30 மணிமுதல் பிற்பகல்4 மணி வரை வழங்கப்படும் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

மற்றைய இரு சேவைகளுக்கான டிக்கெட்டுக்கள் பின்னர் விநியோகிக்கப்படும் எனவும் - தெரிவிக்கப்பபட்டது. (உ-7-139)

### ஜீ.சீ.ஈ. (சா.த.) பரீட்சை முடிவுகள்

## வேம்படி, யாழ்.இந்து முன்னணிப் பெறுபேறு

1999 டிசம்பரில் நடைபெற்ற ஜீ.சீ.ஈ (சாதாரணதரப்) பரீட்சைக்குத் தோற்றிய யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் யாழ்ப்பாணம் அனுப்பப்படுவதற்குத் தயாராக கொழும்பு பலவத்தையில் உள்ள பரீட்சைத் திணைக்களத்தின் புதிய பணிமனையில் நேற்று மாலை வைக்கப்பட்டிருந்தன.

யாழ்.பாடசாலைகளின் ஒவ்வொன்றிலும் முறையே பத்து, ஒன்பது, எட்டுப் பாடங்களில் அதிவிசேட (D) சித்தி பெற்றோரின் எண்ணிக்கை வருமாறு:-

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி உட்பட சில பாடசாலைகளின் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளமுடியவில்லை.)

| பாடசாலை | 10D | 9D | 8D |
|---|---|---|---|
| வேம்படி மகளிர் | 19 | 20 | 15 |
| யாழ் இந்து | 07 | 15 | 24 |
| சாவகச்சேரி இந்து | 02 | 04 | 16 |

(12ஆம் பக்கம் பார்க்க)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை ஆசிரியரும்
எழுத்தாளருமான

**திரு.மு.இராசநாயகம் (அநாதரட்சகன்)**

அவர்கள் தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் படிப்புப் பரீட்சையில் (4AB) சிறந்த பெறுபேறுகளைப் பெற்றமையைப் பாராட்டி மகிழ்ச்சியுடன் மனமார வாழ்த்துகின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள்.
*யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம*

(75139)

---

# தேவை

அலுமினியத தொழிற்சாலைக்கு
**ஸ்பின்னர் தேவை**

தகுதி உடையோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

**இல. 18, சிவன்வடக்குவீதி,
யாழ்ப்பாணம்.**

(75053)

---

# வியாபார ஸ்தாபனம் இடம் மாற்றம்

**அன்பர்களே! வாடிக்கையாளர்களே!
19 கே.கே.எஸ். வீதி சுன்னாகம் எனும் முகவரியில்
இயங்கிவந்த**

## சிங்கர் கொம்பிளெக்ஸ்

என்னும் ஸ்தாபனம் தற்போது இன்று (06-04-2000) வியாழக்கிழமை முதல் இணுவில் கிழக்கு, காரைக்கால் சிவன் கோயிலடியில் ஆரம்பமாகி இயங்குகின்றது என்பதனை அனைத்து அன்புள்ளங்களுக்கும் அறியத் தருகின்றோம்.

அனைவரது நலன்கருதியும் சேவை நோக்குடன் எமது ஸ்தாபனத்தின் இரவு பகல் நேரத் தொலைத்தொடர்பு சேவையினையும் இணைத்துள்ளோம் என்பதனையும் பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**T.P NO:- 070-212776 (உள்நாடு)
0094-70-212776 (வெளிநாடு)**

**பூ.கோடி.**
உரிமையாளர்
(75137)

---

புதுவருடத்தை முன்னிட்டு

# லிங்கம்ஸ்

**சில்க்ஹவுஸ்
(மேல்மாடி)**

*மாபெரும் மலிவு விற்பனை*

| | |
|---|---|
| 1 லெந் சூட்டிங் | 200/= |
| 4 சாறிகள் | 1000/= |
| 1 மாட்டின் சேட் | 200/= |
| 1 சிறுவர் மாட்டின் | 175/= |
| 1 சைனா துவாய் | 150/= |
| 1 செக் சேட் | 180/= |

மற்றும்
ரீ-சேட், காஞ்சிபுரம், மணிப்புரி, பேபி சூட்
இன்னும் பல!

சொற்ப கையிருப்பே உண்டு.
விரையுங்கள்!

## லிங்கம்ஸ் சில்க்ஹவுஸ்

இல.18, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
T.P.2138

* திருமண ஆடைத் தேர்வில் பிரசித்தி பெற்றது.
(C/11624)

---

# லிபேட்டி

**அச்சுவேலி**

**ஆனந்தபாபு, மோகினி**
நடிப்பில்
**நான் பேச நினைப்பதெல்லாம்**

காட்சிகள்:- 10.30, 2.30
T.P - 070 - 212223
" - 070 - 212678
Fax No.0094 - 70212223
(74706)

---

# ராஜா

யாழ்ப்பாணம்

**4ஆவது வெற்றி வாரமாக
ரஜனிகாந்த், சௌந்தர்யா,
ரம்யாகிருஷ்ணன், சிவாஜி
மற்றும் பலர் நடித்த**

## படையப்பா

காட்சிகள்
10.30, 2.30
(C/11604)

---

# நாகம்ஸ்

**சுன்னாகம்**
இன்று மட்டும்
**ரம்யாகிருஷ்ணன்,சௌந்தர்யா**
நடித்த

## அம்மன்

(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
மனிதர்களைப் பேய்களுக்காகக் கொலை செய்யும் சம்பவங்கள் நிறைந்த படம்

(75070)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 - 02 - 1949 | 07 - 03 - 2000 |

அமரர்
## காங்கேயன் ஆனந்தக்குமாரசாமி
(வங்கி ஊழியர்)

**நாம் முளைவிட்டுத் தளிர்விடும் வேளையில்
எமைத் தவிக்கவிட்டுச் சென்ற அப்பாவே!
நேற்றுவரை பக்கத்திலிருந்த உங்களை
இன்றோடு இதயத்தில் இருத்திவிட்டு
இருளில் தத்தளிக்கின்றோம்.
உங்கள் நினைவுகள் எங்கள் மனங்களில்
என்றும் நிழலாடும்.**

இன்று(06.04.2000) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய.

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**

(75127)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 05 - 1924 | 07 - 03 - 2000 |

அமரர்
## வல்லிபுரம் பரராசா

நல்ல பதி தாவடியில் நாடு போற்ற
நானிலத்தில் யாவர்க்கும் அன்பு காட்டி
வல்லவனாய் இனியவனாய் வளமார வாழ்வு
வாழ்ந்து இறை சிவபதத்தின் பேறு பெற்ற
வல்லிபுரம் பரராசா நின் முகத்தைப் பார்ப்போமோ?
நின்குரலைக் கேட்போமோ இனி நாம்?
தொல்லுலகை விட்டெங்கு சென்றீர் ஐயா?
திருச்சிற்றம்பலம் கழலில் பெறுக சாந்தி!

இன்று வியாழக்கிழமை நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'ஆனந்தவாசா'
தாவடிவடக்கு,
கொக்குவில்.

**மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள், மைத்துனர்,
சகோதரி, பேரப்பிள்ளைகள்.**

(C/11647)

---

KOBE KOBE KOBE KOBE KOBE

# நீங்கள் வாங்கும் பொருள் தரமானதா?

**உங்கள் பணத்திற்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.**

**உங்களுக்குத் திருப்தி இல்லையெனில் முழுப்பணத்தையும் மீளப்பெறும் வசதியோடு வருகின்றன!**

## KOBE

## அன்டனாக்களும் பூஸ்டர்களும்

**இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிக்கும் தரமான பொருள்கள்**

உங்களுக்கு அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தங்கு தடையின்றி தெட்டத் தெளிவாகப் பார்த்து மகிழ வேண்டுமா?

*கவலை வேண்டாம்!*

*இப்போது!*

32 வெவ்வேறு வடிவங்களில் அன்டனாக்களும், 21 வடிவங்களில் பூஸ்டர்களும்

**இலங்கையில் எப்பாகத்திலும் பாவனைக்குகந்த தரத்துடன் கிடைக்கின்றது.**

**LANKA NIPPON**

No. 18, Keyzer Street, Colombo - 11
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junc. Colombo - 4
Tel:589992

**'KOBE தரத்தின் சின்னம்'**

KOBE KOBE KOBE KOBE KOBE

# வட்டார வழக்கச் சொற்களை சேகரித்து நூல் வெளியிடத் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 6

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கிராமங்களில் இன்னமும் வழக்கிலிருக்கும் வட்டார வழக்கச் சொற்களைச் சேகரித்து ஆவணப்படுத்தும் திட்டம் ஒன்றை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை மாகாணபண்பாட்டலுவல்கள் பிரிவு உதவிப்பணிப்பாளர் எஸ். எதிர்மன்னசிங்கம் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

கிராமங்கள் தோறும் அரிதானதும், சிறப்புமிக்கதுமாக உள்ள சொற்கள் இந்தத் திட்டத்தின் கீழ் முதலில் சேகரிக்கப்படவுள்ளன.

பின்னர் இவ்வாறு சேகரிக்கப்படும் சொற்கள் மாவட்டரீதியாக வேறுபடுத்தப் பட்டு நூல்வடிவில் வெளியிடப்படும் என்று அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலயக்கல்வி அலுவலகங்களில்கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களின் மூலம் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

தீவகக்கல்வி வலயத்துக்கு உட்பட்ட நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை கல்விக் கோட்டப் பகுதிகளில் அந்த அந்தப் பகுதிக்கான கலாசார உத்தியோகத்தர்கள் மூலம் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-7)

# ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி சிரமதானப் பணி மூலம் துப்புரவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

ஊர்காவற்றுறை வைத்தியசாலையின் உட்பகுதியும் வெளிப்பகுதியும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் சிரமதானம் மூலம் சுத்தம் செய்யப்பட்டன.

தீவுப்பகுதி மக்கள் முன்னர் இடம்பெயர்ந்திருந்தகால் வைத்தியசாலைப் பகுதியில் மரங்களும் பற்றைகளும் வளர்ந்து காணப்பட்டன. அவற்றை அகற்றுவதில் பிரதேச சபை உறுப்பினர்களும் சபையில் கடமைபுரியும் ஊழியர்களும் அந்தப் பிரதேச மக்களும் ஈடுபட்டனர். சிரமதான முடிவில் ஊழியர்கள் அனைவருக்கும் சிருடை வழங்கப்பட்டது.

இனிவரும் காலங்களில் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் இவ்வாறான சிரமதானப் பணி ஒன்றை மேற்கொள்வது என்றும் பிரதேச சபையினரால் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி சிரமதானப்பணி ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும் ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளருமான ந. மதனராஜா தலைமையில் இடம் பெற்றது. (ஐ-4-7)

# மேலும் இருவரின் வழக்குகள் மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அனுராதபுரம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையில் விடப்பட்ட மேலும் இரு குடாநாட்டு இளைஞர்களின் வழக்குகள் கடந்த மூன்றாம் திகதி யாழ். நீதிமன்றத்துக்கு மாற்றம் செய்யப்பட்டன.

இலங்கைநாதன் கஜேந்திரன் (திருநெல்வேலி, ஆடிய பாதம் வீதி), சங்கிலிதேவன் சண்முகலிங்கம் (யாழ். சிவன் கோயில் கிழக்கு வீதி) ஆகியோரின் வழக்குகளே இங்கு மாற்றஞ் செய்யப்பட்டன.

தற்போது பிணையில் சென்றுள்ள இருவரையும் ஜூன் 26 ஆம் திகதி யாழ். நீதிமன்றில் தோன்றுமாறு யாழ். பொலிஸ் நிலையம் ஊடாகக் கட்டளை அனுப்புமாறு நீதிவான் இ. த. விக்னராஜா உத்தரவிட்டார் (இ-9)

# தென்மராட்சி கல்விமான்கள் அப்பகுதி மாணவருக்கு உதவ வேண்டும்

## துணைவேந்தர் சொல்கிறார்

சாவகச்சேரி, ஏப்ரல் 6

தென்மராட்சி சிறந்த கல்விமான்கள், அதிபர்கள், சான்றோர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது அவர்கள் கிராமிய மட்டத் தொடர்புகளுடன் நிலைத்து நிற்கின்றனர். அவர்கள் அறிவால், ஆற்றலால் உயர்ந்தவர்கள். எனவே தென்மராட்சியின் கல்வி வளத்தை மேம்படுத்த அவர்கள் முன்வர வேண்டும்.

தென்மராட்சிக் கல்வி வலயத்துக்குஉட்பட்டபாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

துணைவேந்தர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கல்விதான் ஒரு சமுதாயத்தின்வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். எனவே மாணவர்கள் அத்தகையகல்வியை வளமானதாக்கிக் கொள்ளவேண்டும்.நாம் காலடிஎடுத்துவைத்துள்ள 21 ஆம் நூற்றாண்டில் கல்வியில் பெரும்பாலான மாணவர்கள்உயர் கல்வியைப் பெறுவதன் மூலம்உயர்பொருளாதார கட்டமைப்புக்களை முன்னெடுத்து வேலைவாய்ப்புக்களைப் பெறக் கூடியதாக இருக்கும்.

### மாறிவரும் உலகில்

உலகில் மாறிவரும் பூலோக விஞ்ஞான முறைக்கேற்ப வாழவேண்டியநிலைக்குநாம் தள்ளப்பட்டுள்ளோம். அதற்கான புதிய கல்வி முறைகள் கல்வி நிர்வாக முறைகள் காணப்படுகின்றன.

அதற்கேற்ப மாணவர்களை பல்வேறு நிலைகளில் வளம் படுத்துதல் வேண்டும். இக் கால கட்டத்தில் அரசியல்மட்டம் முதல் சாதாரண பாமர மக்கள் வரை கல்வியைத் தொடரும் நிலையுடன் அதனை மேம்படுத்தச் செய்யும் நிலையில் வளர்ந்து வருகின்றனர்.

தற்பொழுது தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் சிறப்படைந்து காணப்படுகின்றனர்.

அதனை மாணவர்களாகிய நீங்கள் தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டும். புதிய பட்டதாரி மாணவர்கள் உருவாக வேண்டும். கல்வியால் தான் எதிர்காலம் சிறப்படையும். இன்றைய சமுதாயம் முன்னைய சமுதாயத்தைப் போன்றது அல்ல— இன்றைய சமுதாயம் அறிவு ஆற்றலை அடிப்படையாகக் கொண்டது.

எனவே பொருளாதாரத்தை மேம்படுத்த அதனை முன்னெடுக்க... தென்மராட்சிப் பிரதேசம் வளம் பெற — அதற்கான கல்வி சிறக்க வேண்டும்.

### உயர்கல்வி நிறுவனம்

தென்மராட்சிப் பிரதேசம் நீண்ட பரந்த பிரதேசம். நாவற்குழியில் ஆரம்பித்து இயக்கச்சி வரை கொண்ட— நிலப்பரப்பினை உடையது. ஆதலால் இப் பிரதேசத்தில் உயர் கல்வி நிறுவனங்கள் அமைய வேண்டும். உயர் கல்விப் பீடங்கள் நிறுவப்படல் வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். அவை இப் பிரதேசத்தை உள்ளடக்கிய நகரமான சாவகச்சேரியில் அமைதல் பொருத்தமானது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மெய்வல்லுநர் போட்டிகள் முன்னேற்றம் அடைய வேண்டும். அவை சர்வதேச ரீதியில் உயர வேண்டும். அதற்காக எல்லோரும் சேர்ந்து பாடுபடல் வேண்டும்; முன்னெடுக்க வேண்டும். எனவே அதற்கான வளங்கள், விளையாட்டு மைதானம் தேவை— இவை அமைக்கப்படல் வேண்டும். இது சாவகச்சேரி நகரை மையமாகக் கொண்டு பார்வையாளர் அரங்கும், விளையாட்டு மைதானமும் உருவாக்கப்படல் வேண்டும். இது அன்று தொட்டு சாத்தியமில்லாமல் இருக்கின்றது. ஆனால் விளையாட்டு மைதானம், பார்வையாளர் அரங்கு (ஸ்ரேடியம்) இப்பகுதி மக்களுக்குத் தேவையான ஒன்றாகும்— என்றார்.

இந்த நிகழ்வில் விருதுகளை பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளையும், திருமதி இ. பாலசுந்தரம் பிள்ளையும் வழங்கினர். நன்றியுரையை தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனை உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். குமாரசாமி நிகழ்த்தினார்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பாடசாலைகளில் இருந்து சுமார் 2000 க்கு மேற்பட்ட மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இப் போட்டிகளில் தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட கொடிகாமம் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களும், சாவகச்சேரிக் கல்விக் கோட்டப்பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இவற்றில் முதலாம் இடத்தை 612 புள்ளிகளைப் பெற்று சாவகச்சேரி கல்விக் கோட்டமும், இரண்டாம் இடத்தை 604 புள்ளிகளைப் பெற்று கொடிகாமம் கல்விக் கோட்டமும் பெற்றுக் கொண்டன. (இ-31)

# செய்திக் கொத்து

## கட்டடங்கள் தரைமட்டம்

புன்னாலைக்கட்டுவன், ஏப்ரல் 6

வடக்கு புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கடந்த கால இராணுவ நடவடிக்கையின்போதுகட்டடங்கள் சில தரை மட்டமாக்கப்பட்டுள்ளன.

பலாலி வீதியின் இருமருங்கிலும் உள்ள இடிந்த கட்டடங்களே இவ்வாறு இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. (க-133)

## கட்டாக்காலி நாய்கள்

அச்சுவேலி, ஏப்ரல் 6

அச்சுவேலிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருவதாகப் பொதுமக்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

அச்சுவேலிப் பகுதியில் தோல் நோய்களுடன் பெருமளவு கட்டாக்காலி நாய்கள் நடமாடுவதால் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் இயல்பு நிலையில் நடமாட முடியாதுள்ளது.

தற்போது கடும் வெப்பம் நிலவுவதால் கட்டாக்காலி நாய்கள் விசர் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகி அலைவது குறிப்பிடத்தக்கது. (க-11)

## வீதி திருத்தம்

மட்டுவில், ஏப்ரல் 6

மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்துக்கும் கனகம் புளியடிக்கும் இடையிலுள்ள வீதி தற்போது திருத்தப்பட்டு வருகின்றது.

இந்த வீதியின் திருத்த வேலைகள் முன்பு ஆரம்பிக்கப்பட்டு பின்னர் சிறிது காலம் இடைநிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க-133)

## புனரமைப்புக்கு 10 லட்சம்

நெல்லியடி, ஏப்ரல் 6

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையின் சமையல் கூடத்தைப் புனரமைப்பதற்கென யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் 10 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. (க-109)

## ஆஸ்பத்திரி விஸ்தரிப்புக்கு காணி

அச்சுவேலி, ஏப்ரல் 6

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் புதிய கட்டடத்தை அமைப்பதற்கான காணியைக் கொள்வனவு செய்வதற்காக பொதுமக்களிடம் இருந்து நிதி சேகரிக்கப்படுகிறது.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கும் பல் வைத்தியப் பிரிவுக்கும் இடையே உள்ள 8 பரப்பு காணி வைத்தியசாலையின் பயன்பாட்டிற்கு கொள்வனவு செய்யப்படவுள்ளது.

எட்டு லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்படவுள்ள காணிக்கு உரிய பணம் பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்டு வருகின்றது.

புதியகட்டடம் பிரதான வீதியோரத்தில் கொள்வனவு செய்யப்படவுள்ள காணியில் அமைக்கப்படவுள்ளது. (க-11)

## பனங்கட்டி உற்பத்தி

புன்னாலைக்கட்டுவன், ஏப்ரல் 6

குடாநாட்டில் தற்போது பனங்கட்டி உற்பத்தி பரவலாக எல்லா இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் இவை அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பனங்கட்டிகள் தென் பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுவதனாலும் சித்தமருத்துவ தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுவதனாலும் உற்பத்தியாளர்கள் இந்த வருடம் அதிகளவு உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-133)

## வசந்தமண்டபம் புனரமைப்பு

கொழும்புத்துறை, ஏப்ரல் 6

வரணி ஸ்ரீசிட்டி வேரம் கண்ணகைஅம்மன் ஆலயத்தின்வசந்தமண்டபப் புனரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இம் மண்டபம் ஏற்கனவே சேதமடைந்திருந்த போதும் தற்பொழுது நேர்த்தியான முறையில் மிகச்சிறப்பாக அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [க-30]

## மாணவர் விடுதி பூர்த்தி

கைதடி, ஏப்ரல் 6

கைதடி சித்த மருத்துவ மாணவர் விடுதி வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இவ்விடுதி நூறு மாணவர்கள் தங்கிக் கல்வி கற்கக் கூடிய விதத்தில் சகல வசதிகளும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

விரைவில் யாழ். பல்கலைக் கழகம் கட்டடத் தொகுதிகளைப் பொறுப்பேற்று மாணவருக்கு வழங்கவுள்ளது. பெரும்பாலும் வெளியிடங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமெனச் சித்த மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. (க-74)

## கிளிநொச்சியில் பாடசாலைகள் செயலிழப்பு

வவுனியா, ஏப்ரல் 6

நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமெனக் கோரி தொண்டர் ஆசிரியர்கள் மேற்கொண்ட மறியல் போராட்டம் காரணமாக கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும் நேற்று முன்தினம் செயலிழந்தன.

மேற்படிமாவட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் தொண்டர் ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டதை அடுத்தே பாடசாலைகள் முழுநாளும் செயலிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டத்தின்இறுதியில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (இ-7)

## [புதுவருடப்பிறப்பை முன்னிட்டு]

யாழ். நகரில்!

## 'சோபனா ரெக்ஸ்'

## விற்றுத்தீர்த்தல்

வாடிக்கையாளர், நண்பர்கள், அன்பர்கள் ஆதர வாளர்களின் நலன்கருதி கையிருப்பிலுள்ள புடைவைத்தினுசுகள்யாவும் கொள்விலையிலும் குறைவாக விற்பனைசெய்யப்படுகிறது.

**சோபனா ரெக்ஸ்** 16, பெரியகடைவீதி யாழ்ப்பாணம்.

(75105)

---

மிலேனியம் ஆண்டில்

## 3 ஆவது அகவை

அடைகிறது

## சுவீற் ஹனி வீடியோ & போட்டோ

96, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.

SWEET HONEY -VIDEO- SHV PHOTO

192/1, நாவலர் வீதி. யாழ்ப்பாணம்.

உங்கள் இல்லங்களில் நடைபெறும்

* மங்களகரமான நிகழ்வுகள்

* கோயில் நிகழ்வுகள் * அரங்க நிகழ்வுகள்

என்பவற்றை படம் பிடித்து நவீன மிக்ஷர் மூலம் நிகழ்வுகளை ஒளிப்பதிவு செய்து நினைவுகளாகப் பதிவு செய்து தர நாடுங்கள்.

**சுவீற் ஹனி வீடியோ & போட்டோ**

அத்துடன்

- சொக்கட்டான் பந்தல்
- கொமோண்டோ கதிரைகள்
- வாகன வசதிகள்

யாவற்றையும் எம்மிடமே பெற்றுக் கொள்ளலாம்.

பி. கு: வீடியோ நாடாவில் இருக்கும் பதிவை C.D. யில் பதிவு செய்து தரப்படும். வீடியோ ஸ்தாபனமாயினும் ஏற்றுக் கொள்ளப்படும்.

வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் உங்கள் ஆதரவிற்கும் ஒத்துழைப்பிற்கும் எங்கள் நன்றி!

(74997)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### உயர்திரு. சி. மகாலிங்கம் அவர்கள்

02 . 04 . 2000 அன்று

பொலிகண்டி. வீரபத்திரர் ஆலய பரிபாலன சபையினாலும் வீரபத்திரர் இந்து இளைஞர் மன்றத்தினாலும் பாரதி சனசமூக நிலையத்தினாலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட வீரபத்திரர் ஆலயத்தின் 25 வருடங்களுக்கு மேலான செயலாளரும் மந்திகை அரசினர் வைத்தியசாலையின் இயக்குநர் சபை உறுப்பினரும் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினரும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினரும் வடமராட்சி தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் முன்னாள் செயலாளரும் சிவ த்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியிடமிருந்து "அறப்பணிச் செல்வர்" எனும் கௌரவ விருதினைப் பெற்றவரும் இனப்பற்றாளரும் மனித நேயருமான சமாதான நீதிவான்

**உயர் திரு. சி. மகாலிங்கம் அவர்களை**

பாராட்டி வாழ்த்துவதில் நாமும் பெருமை அடைகின்றோம்.

அபிமானிகள்,
கொற்றாவத்தை.

(75101)

---

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை, மல்லாகம்.

கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் 17-04-2000 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை இக்ராட் நிறுவனத்தில் "தரம் எம் 9" அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்து என்னால் ஏற்கொள்ளப்படும். இந்தக் கேள்விகள் 17-04-2000 ஆம் திகதி பிற்பகல் 2-00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தலைவர், வலி. வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, மல்லாகம்" என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் 17-04 2000 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் எழுதப்படல்வேண்டும்.

| வேலையின் பெயர் | வைப்புப் பணம் | படிவப் பணம் |
|---|---|---|
| 1. கட்டுவன்புலம் பாடசாலை வீதி வேலை. | 1500,00 | 500,00 |
| 2. சுப்பிரமணியர்சுவாமி கோயில் வீதிவேலை. | 1000,00 | 500,00 |
| 3. குழாய்க்கிணறுகள்(08இலக்கம்)ஒவ்வொன்றுக்கும் | 250,00 | 100,00 |

**அமைவிடங்கள்**

அ. கட்டுவன்புலம், கட்டுவன் மேற்கு.
ஆ. கும்பலை முன்பள்ளி, அளவெட்டி.
இ. மயிலங்கூடல் சுகாதார நிலையம், இளவாலை.
ஈ. குருவளை நலன்புரி நிலையம், அளவெட்டி தெற்கு.
உ. பொன்னிப்புலம். அளவெட்டி.
ஊ. திருவள்ளுவர் சனசமூக நிலையம், மாத்தனை.
எ. ஐக்கிய வாலிபர் சனசமூக நிலையம், அளவெட்டி தெற்கு.
ஏ. பாரதி சனசமூக நிலையம், தெல்லிப்பழை கிழக்கு.

மேற்படி வைப்புப் பணத்தையும், கேள்விப்படிவக் கட்டணத்தையும் காசாகச் செலுத்துவதன் பேரில் 17-04-2000 ஆம் திகதி முற்பகல் 10-00 மணி வரை எம்மால் படிவங்கள் வழங்கப்படும். எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வி. சண்முகநாதன், ஜே. பி.,
உப தலைவர்.

வலி. வடக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
காங்கேசன்துறை,
மல்லாகம்.
04—04—2000

(சி/11650)

---

## வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி
# கேள்வி அறிவித்தல் - 2000

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரசத்திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் எதிர்வரும் 20 - 04 - 2000 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். இக்கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் அன்றைய தினமே பிற்பகல் 2. 00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை, 'தவிசாளர், வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி' என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை, "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் எதிர்வரும் 20 - 04 - 2000 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 1. | கோப்பாய் வடக்கு சந்தை திருத்தம் | 2000.00 | 500.00 |
| 2. | கோப்பாய் சந்தை மதில் கட்டுதல் | 1000.00 | 250.00 |
| 3. | அச்சுவேலி சந்தை திருத்தம் (மரக்கறி, மீன் சந்தை) | 500.00 | 150.00 |
| 4. | உரும்பிராய் சிவன் வீதி திருத்தம் | 500.00 | 150.00 |
| 5. | உரும்பிராய் கணேசா ச.ச. நிலைய கட்டட திருத்தம் | 500.00 | 150.00 |
| 6. | அச்சுவேலி கஜமுகன் பாலர் பாடசாலை விளையாட்டு உபகரணங்கள் செய்தல் | 500.00 | 150.00 |
| 7. | தொண்டமானாறு ஆவரங்கால் 1 ஆம் ஒழுங்கை திருத்தம் | 300.00 | 150.00 |
| 8. | நீர்வேலி கந்தசுவாமி கோயில் மேற்கு வீதி திருத்தம் | 300.00 | 150.00 |
| 9. | அச்சுவேலி காளிகோயில் வீதி திருத்தம் | 500.00 | 150.00 |
| 10. | கோப்பாய் வடக்கு கலம்பரை வீதி சிமெந்து அணை கட்டுதல் | 500.00 | 150.00 |
| 11. | உரும்பிராய் இந்து இளைஞர் ச.ச. நிலைய மலசல கூடம் அமைத்தல் | 250.00 | 150.00 |
| 12. | யோகபுரம் பகுதி குழாய்க்கிணறு திருத்தம் | 250.00 | 150.00 |
| 13. | இருபாலை ஸ்ரீவிக்கினேஸ்வரா ச.ச.நி. திருத்தம் | 300.00 | 150.00 |
| 14. | புத்தூர் கிழக்கு குமாரசாமி வீதி, மத்திய ச.ச.நி. முன் ஒழுங்கை திருத்தம் | 500.00 | 150.00 |
| 15. | சிறுப்பிட்டி ஜனசக்தி ச.ச.நி. மலசலகூடம் அமைத்தல் | 300.00 | 150.00 |
| 16. | உரும்பிராய் இந்துக்கல்லூரி ஒழுங்கை திருத்தம் | 500.00 | 150.00 |
| 17. | புத்தூர் புன்னைக்குள வீதி மதகு அமைத்தல் | 500.50 | 150.00 |

மேற்குறிப்பிட்ட வைப்புப் பணத்தையும், கேள்விப் படிவக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 19 - 04 - 2000 ஆம் திகதி பிற்பகல் 12. 30 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பூ. குணசிங்கம், ஜே. பி. யு.எம்
தவிசாளர்

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
03-04-2000.

(சி/11654)

# செச்சினியாவில் ரஷ்யப் படைகள்; மனிதஉரிமைமீறல் நடவடிக்கைகள்!

## நேரில் சென்ற ஐ.நா. அதிகாரி தகவல்

நியூயோர்க், ஏப்ரல் 6

செச்சினியாவில் ரஷ்யப் படைகள் நிலை கொண்டிருந்த சமயம் மேற் கொண்ட மனித உரிமைமீறல் செயல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள், ஆணைக்குழு தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

ஆணைக்குழுவின் அதிகாரியான மேரி றொபின்ஸன் ரஷ்யாவில் மேற்கொண்ட ஐந்து நாள் விஜயத்தின் பின்னர் இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

செச்சினியாவில் நிலை கொண்டிருந்த சமயம் ரஷ்யப் படைகள்மக்களைக்கண்டபடி கைது செய்து சித்திரவதை செய்துள்ளனர் என்றும் —

முகாம்களில் மக்களைத் தடுத்து வைத்திருந்தனர் என்றும் —

படுகொலையை ஈவிரக்கமின்றிச் செய்துள்ளனர் என்றும் — தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகஅவர் தெரிவித்துள்ளார்.

செச்சினியாவில் தங்கியுள்ள அகதிகளுடன் கலந்துரையாடிய சமயம் இந்த விவரங்களைப் பெறமுடிந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களைஇனங்கண்டுஅவர்களைத் தண்டிக்க வேண்டும் என்றும் —

இவற்றை விசாரிக்க சுதந்திரமான விசாரணைக் குழுக்களை அமைக்க வேண்டும் என்றும் — தாம் ரஷ்யாவிடம் கோரியுள்ளதாகஅவர்மேலும் சொன்னார்.

இந்த விடயம் தமது நாட்டின் உள் விவகாரம் என்று குறிப்பிட்ட ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் விசாரணைக்குழுஅமைப்பதுகுறித்து ஆராயலாம் என்று கூறியுள்ளார்.

[இ–3]

## வன்செயல்களைக் கட்டுப்படுத்த கூட்டு நடவடிக்கை அமைப்பு

### இந்திய உள்துறை அமைச்சுநடவடிக்கை

புதுடில்லி, ஏப்ரல் 6

இந்தியாவின் மாநிலங்களில் இடம்பெறும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த வசதியாகக் கூட்டு நடவடிக்கைத் தலைமையகம் ஒன்றை அமைக்க இந்திய உள்துறை அமைச்சு முடிவு செய்துள்ளது.

உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானியுடன் மாநில முதலமைச்சர்கள் நேற்று நடத்திய கலந்துரையாடலின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மாநிலங்களில் இடம் பெறும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த மாநிலப்படைகளுக்குள்ஓர் இணைப்பை ஏற்படுத்த வசதியாக இந்த அமைப்பை உருவாக்கவேண்டும் என்று முதலமைச்சர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த அமைப்பின் மூலம் வன்செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அத்வானி உறுதி கூறினார். (இ-3)

## லாலுவுக்கு 14 நாள் காவல்

பிஹார் மாநில முன்னாள் முதல்வர் லாலுபிரசாத் யாதவ் 14 நாள் சிறைக் காவலில்வைக்கப்பட்டுள்ளார்

வருமானத்துக்கு அதிகமான சொத்து சேர்த்த வழக்கில் பாட்னா புலனாய்வு சிறப்பு நீதி மன்றம் மேற்கண்ட ஆணையைப்பிறப்பித்தது.

இந்தவழக்கில்குற்றஞ் சாட்டப்பட்டுள்ள லாலுவின் மனைவியும் பிஹார் முதல் வருமான ராப்ரி தேவி 2 லட்சம் ரூபா காப்புறுதிப் பிணையில் விடப்பட்டுள்ளார்,

லாலு மற்றும் ராப்ரி மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டதும் அவர்கள் நேற்று நீதி மன்றத்தில் சரண் அடைந்திருந்தனர்.

(இ-க-ரி)

## ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து ரஷ்யாவை வெளியேற்ற வேண்டும்!

நியூயோர்க், ஏப்ரல் 6

செச்சினியாவில் ரஷ்யப் படைகள் மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டதால் அந்த நாட்டை ஐரோப்பியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேற்ற வேண்டும். என்று ஐ. நா. மனித உரிமைகள் குழு, கூட்டமைப்பின் அரசியல் பீடத்துக்கு சிபார்சு செய்துள்ளது.

ரஷ்யாவில் ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு திரும்பியுள்ள ஐ நா. மனித உரிமைகள் குழு அதிகாரியான மேரி றொபின்சனே இந்தச் சிபார்சைச் செய்துள்ளார்.

ஐரோப்பிய கூட்டமைப்பில் முக்கிய நாடாக அங்கம் வகிக்கும் ரஷ்யா மீது தொடுக்கப்பட்டுள்ள பெரும் நெருக்குதல் இது என்றும் —

புதிய அதிபராக பதவி ஏற்கவுள்ள புடினுக்கு இந்த விடயம் பெரும் சிக்கலை உருவாக்கலாம் என்று — பி.பி.ஸி தெரிவித்தது.

ஐரோப்பிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளும் ரஷ்யாவுக்கு எதிராக கண்டனக் குரல் எழுப்பியுள்ளன.

இந்தக் கூட்டமைப்பே ரஷ்யாவுக்கு கூடுதல் நிதி வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## முறுகல் நிலை

சென்னை, ஏப்ரல் 6

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸுக்கும் தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்திக்கும் இடையில் முறுகல் நிலை உடம்சந்துக்கு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருவரது ஆதரவாளர்களும் கொடும்பாவி எரிப்பிலும் —

எதிர்ப்புப் பேரணிகளிலும்— தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்என்றுகூறப்படுகின்றது.

இருவருக்கும் இடையில் இணக்க நிலை ஒன்றை ஏற்படுத்த தேசிய ஜனநாயக கூட்டணித் தலைவர்கள் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.


இளவாலை
திருமறைக் கலாமன்றம்
அதன் தாய்ச்சங்கத்துடன்
இணைந்து வழங்கும்
"பலிக்களம்"
(யேசுவின் திருப்பாடுகளின் காட்சி)
இடம்:- இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானம்
காலம்:- 2000 – 04 – 07
நாளை பி. ப. 7 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பொறுப்பாளர்
இள / திருமறைக் கலாமன்றம்
பிரவேசம்:- இலவசம்.
குறிப்பு:- சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவில் இரவு 11 மணி வரை ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது.
(75140)



ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 09 — 09 — 1919

இறப்பு 12 — 04 — 1993

கந்தையா தம்பிப்பிள்ளை
(உரிமையாளர், லீலாவதி ஸ்ரோர்ஸ், ராதிகா ஸ்ரோர்ஸ், ரஞ்சனி தொலைத்தொடர்பகம் கைதடி)

புன்னகை முகத்தில் காட்டி
பொட்டோடு நீற்றைப் பூசி
அன்பொடு அறிவும் ஊட்டி
அகத்தினைச் செழிக்க வைத்த
மன்னவர் போற்றும் எங்கள்
மாண்புறு மண்ணில் மைந்தா
அன்று போல் அருகில் காண
ஆண்டேழை அணைத்துக் கொண்டோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

கைதடி கிழக்கு, கைதடி, (சி/11685)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
வெளிவாரி பதிவுகள் பரீட்சைகள் அலகு
வெளிவாரி பரீட்சைகள்
1998

நுண்கலைமாணி முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு, நான்காம் ஆண்டு (கர்நாடக சங்கீதம்/பரத நாட்டியம்/வயலின்/வீணை/மிருதங்கம்) - 1998 கல்வியாண்டுக்குரிய தேர்வுகள் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி (2000–04–25) முதல் ஆரம்பமாகின்றன. இப்பரீட்சைகளுக்காக விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் தங்களது அனுமதி அட்டைகளையும் நேரசூசிகைகளையும் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் 2000 - 04 06 ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

- பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
04-04-2000
(சி/11652)



மறைந்தும் மறையா அன்பு மைந்தனின்
பிறந்தநாள் நினைவு

பாரினில் 1988 — 04 — 06



பரத்தினில் 1999 — 02 — 04

பாஸ்டர்
டானியல் சந்திரேஸ்வரன் அவர்களின்
(எக்காளத் தொனி பூரண சுவிசேஷ சபை — யாழ்ப்பாணம்)
அன்பு மகன்
செல்வன் சந்திரேஸ்வரன் சாம்சன்
(மாணவன் பரி. யோவான் கல்லூரி — யாழ்.)

அன்பின் அருமை மைந்தனே!
ஆண்டவர் சமுகம் ஏற்ற நீர்
பாரினில் நீர் உதித்த இந்நன்னாளில்
பாசமுடன் நாம் வாழ்த்த நீர் இல்லையே!
ஆண்டவர் அரவணைப்பில் இசைந்திருக்க
இப்புதிய நாளில் ஆண்டவரை ஆராதிக்கின்றோம்

அப்பா, அம்மா,
சகோதரர், சகோதரி,
உற்றார், உறவினர்.

இல. 21, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (75138)

# திருநெல்வேலி கிழக்கு
# அருள்மிகு வெள்ளைப்பிள்ளையார் ஆலய
# மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலர்

06 – 04 – 2000

## ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி

திருநெல்வேலிப் பகுதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் வெள்ளைப் பிள்ளையாருக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனநிறைவடைகின்றோம். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மனிதனாக வாழ்வதற்கு ஆலய வழிபாடு அவசியமாகும். ஆகையால்தான் நம்முன்னோர் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றனர். எனவே வெள்ளை விநாயகனின் கும்பாபிஷேகத்தை தரிசிப்பது பேற்றிற்குரியதாகும். ஆலய பரிபாலன சபையினர் சடையம்மா மண்டபத்தை அமைத்து உள்ளது பாராட்டிற்குரியது. இக் கைங்கரியத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் விநாயகன் அருள் பாலிக்க பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
தேசிகஞானசம்பந்தபரமாச்சார்ய
சுவாமிகள்
நல்லை ஆதீன முதல்வர்

## அரச அதிபரின் ஆசி

யாழ்ப்பாணம் எங்கும் ஆஸ்திக வாழ்வினை உணர்த்தும் செயல்கள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. இவ்வகையில் வெள்ளைப்பிள்ளையார் ஆலயமும் படிப்படியாக வளர்ச்சி கண்டு அஞ்ஞான இருளை அகற்றி ஞான ஒளியைப் பிரகாசிக்கும் இடமாக விளங்குகின்றது. மடாலயமாகவுள்ள இவ்வாலயம் சிறுகுடிலில் இருந்து அழகியமண்டபம் கொண்டசிறப்பான ஆலயமாக வளர்ச்சி கண்டுள்ளது. இவ்வாலயம் மகா கும்பாபிஷேகம் காண்பதையிட்டு மனம் மகிழ்வதுடன் ஆலயமும் அயலும் சிறக்கவும் ஆத்மீகப்பணி தொடரவும் எல்லாம் வல்ல வெள்ளை விநாயகனருளால் ஆசி கூறுகின்றேன்.

க. சண்முகநாதன்
அரச அதிபர்.
யாழ். மாவட்டம்.

## பரிபாலனசபையின் வாழ்த்து

கடந்த கால இடப்பெயர்வினால் சேதமுற்ற ஆலயத்தை புனரமைக்க எண்ணிய போது எம்பெருமானின் திருவருளும் அடியவர்களது தாராள உதவியும் ஒருங்கே கிடைத்தன. இதன் பயனே இன்று புதுப் பொலிவுடன் காட்சிதரும் ஆலயமும் ஆலயமுன்றலில் கம்பீரமாகக் காட்சிதரும் மணிக்கோபுரமும் தெற்குப்புற வீதியில் 63 அடி நீளமான சடையம்மா மண்டபமும் ஆகும். இப்புண்ணிய கைங்கரியத்திற்கு சகல வழிகளிலும் ஆதரவு வழங்கிய அடியவர்களுக்கும் வாலையம்மன் சனசமூக நிலையத்தினருக்கும் வெள்ளை விநாயகனின் திருவருட் கடாட்சம் கிடைக்கப் பெறுவதாக!

பரிபாலன சபையினர்

மலர் அமைப்பு:

சி. பத்மராஜா,
கா. சண்முகதாஸன்.

## வெள்ளை விநாயகன் ஆலய வரலாறு



திருமூலரால் சிவபூமி என சிறப்பிக்கப்பட்ட ஈழத்தின் வடபால் யாழ்ப்பாண நன்னகரருகே நல்லூர் இராஜதானிச் சூழலில் கல்விச்சாலைகளையும், அறநிலையங்களையும் மடங்களையும் தர்மஸ்தாபனங்களையும் கொண்டமைந்துள்ள திருநெல்வேலி கிழக்கில் செங்குந்தர் வீதியில் எழுந்தருளி கடந்த இரு நூற்றாண்டுகளுக்கு மேலாக அருள் பாலித்து வரும் வெள்ளை விநாயகப்பெருமானின் ஆலய வரலாறு நெடியது. இந்த ஆலயமானது மூர்த்தி விசேடமுடையது. நாடிவரும் அடியவரின் வினைகளெல்லாம் வேரோடகற்றி நம்பிக்கையோடு அவன் தும்பிக்கையைப் பற்றுபவர்களுக்கு காரியமெல்லாம் சிந்திக்கச் செய்து திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் விநாயகனை வணங்கி எக்கருமமும் துணிந்தால் நிச்சயம் அது வெற்றியளிக்கும், வெள்ளைப்பிள்ளையாரை வணங்கி வெற்றி பெற்றவர்கள் எண்ணிலடங்காதோர்.

ஆதிகாலத்திலிருந்து ஒரு சிறுகுடிலில் வேப்பமர நிழலில் அருவுருவ விநாயகர் உருவம் வைத்து பூசிக்கப்பட்டு வந்தது. காலப்போக்கிலே இவ்வாலய அயலைச் சேர்ந்த இளையதம்பி என்னும் அடியவர் தொழில் நிமித்தம் முத்திரைச் சந்தையடிக்குச் சென்றபோது அங்கே ஒரு வீட்டிலே பிள்ளையார் உருவம் ஒன்று வீட்டின் பின்புறத்திலே வைத்து வழிபடப்பட்டு வருவதை அறிந்தார். அவர் அவ்வுருவத்தைப் பற்றிக் கேட்டபோது கிணறு வெட்டிய போது கிடைத்ததாகக் கூறவே அவ்வுருவினைப் பெற்று வந்து இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்தார். இந்தப் பிள்ளையார் உருவம் நல்லூர் இராஜதானி சிறப்புற்று விளங்கிய போது ஏதாவது ஓர் ஆலயத்தில் வைத்து வழிபடப்பட்டு பின் அந்நியராட்சிக் காலத்தில் நிலத்தினுள் புதைந்து பின்னர் வெளிப்பட்டது என அறிய முடிகின்றது.

இவ்வாலயத்திற்கு வெள்ளைப் பிள்ளையார் எனப் பெயர்வரக் காரணம், வெள்ளைக்கல்லினாலான உருவம் உடையது அல்லது வெள்ளத்துள் இருந்து கிடைக்கப் பெற்றதே எனக் கூறப்படுகிறது. ஆலயத்தில் உள்ள இரு உருவங்களும் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இவ்வாலயம் ஆகமமுறை சாராதது. அனைவரதும் வழிபாட்டுக்கும் ஆராதிப்புக்குமுரியது. மூலமூர்த்தியறை எப்போதுமே பூட்டப்படுவதில்லை. இத்தகைய சிறப்புமிக்க ஆலயம் படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இந்த ஆலய வளர்ச்சியில் வாலையம்மன் சனசமூக நிலையத்தின் பணி குறிப்பிடத்தக்கது. 1940 களில் இச்சனசமூக நிலையத்தினர் சேகரித்த பணத்தைக் கொண்டு முன் மண்டபமமைத்தனர். பின்னரும் பல்வேறு பணிகளை ஆற்றி வந்துள்ளனர். கடந்த 60 வருடங்களாகப் பூசை உபயமும் செய்து வருகின்றனர். 1987 ல் இந்த ஆலயத்திற்கு ஒன்றரைப் பரப்புக் காணி வாங்கி 10 அடி உயரச் சுற்றுமதில் அமைத்தும் 1990 களில் புனருத்தாரணம் செய்தும் பணிபுரிந்துள்ளனர்.

ஆலயம் பின்னர் 95 இடம்பெயர்வினால் பலத்த சேதமடைந்தது. இதனால் பரிபாலன சபையினர் ஆலயத்தை முற்றாகப் புனரமைத்து 42 அடிநீள மண்டபம் சுந்தரவிமான கர்ப்பக்கிரகம், தாமரைத்தடாக வசந்த மண்டபம், தேவசபை, வைரவர் ஆலயம், 25 அடி உயர மணிக்கோபுரம், 63 அடி நீள சடையம்மாமடம் என்பவற்றைப் பல லட்சரூபா செலவில் அமைத்துள்ளனர். இந்த ஆலயத்திற்கு வீதி இல்லாத குறையை திரு ச. நடராஜா அவர்கள் நிவர்த்தி செய்துள்ளார். இந்த ஆலயம் 06-4-2000 இன்று காலை 8. 37—9. 01 வரையுள்ள சுபவேளையில் குடமுழுக்குக் காண்கின்றது.

இப்புண்ணிய நாளில் இதத ஆலயத்திற்குத் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றிய முன்னாள் பூசகர் அமரர் பௌராணிகமாமணி தம்பிஐயாக்குருக்கள் அவர்களினதும் சடையம்மாவினதும் உருவப்படங்கள் திரைநீக்கம் செய்யப்பட்டு கும்பாபிஷேகச் சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப் படவுள்ளது. இப்புண்ணிய கைங்கரியத்திற்குச் சகல வழிகளிலும் ஆதரவு வழங்கிய அனைவருக்கும் ஆலய பரிபாலனசபை உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் எம்பெருமானின் பரிபூரண கிருபாகடாட்சம் கிடைக்க வேண்டுகின்றது.

★

## பிரதமகுருவின் ஆசியுரை

திருநெல்வேலிப்பதியிலே கருணையோடு விளங்கும் இவ்வாலயம் மகாகும்பாபிஷேகம் காண்பதையிட்டு மகிழ்வடைகிறேன். செங்குந்தர் பதியில் எழுந்தருளி வேண்டுவார்க்கு வேண்டுவனவெல்லாம் கொடுத்து வல்வினையை வேரறுத்து அகிலம் சிறக்கவும் அடியவர் மனமும் வயிறும் ஒருங்கே குளிரவும் வைக்கும் விநாயகன் அருள் கிடைக்க ஆசி கூறுகிறேன்.

சிவத்திரு. ந. மதியழகன்

## கும்பாபிஷேகக்குருவின் ஆசி

அருள்மிகு வெள்ளைப் பிள்ளையாருக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனம் மகிழ்கின்றேன், 'ஓம்' எனும் பிரணவத்திலிருந்து வேதங்கள் தோன்றின. பிரணவ சொரூபியாக விளங்கும் இவ் விநாயகனது திருவடித் தாமரை மலரினை வழிபட்டு எல்லோரும் பேரருள் பெற ஆசி கூறுகிறேன்.

சிவாகம கிரியா சிரோன்மணி
பொன். வரதராஜக் குருக்கள்

## தமிழ்த்துறைத் தலைவரின் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் திருநெல்வேலிப் பதி மண்வளம் மிக்கது. மண்வளம் தந்த மனவளம் இப்பகுதி மக்களுக்கு உண்டு. பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்து காணப்படும் சைவ ஆலயங்கள், தேவார, பாராயண, மந்திர ஓசை வியாபித்திருக்கும் தெய்வீக சூழலிலே எழுந்தருளியிருக்கும் விநாயகனது அருள் அனைவருக்கும் கிடைக்கவும் கும்பாபிஷேகம் சிறக்கவும் வாழ்த்துகிறேன்.

கலாநிதி எஸ். சிவலிங்கராசா
தலைவர், தமிழ்த்துறை.
யாழ். பல்கலைக்கழகம்.

## விநாயகர் துதி

"புல்லினால் ஒன்று கோடி புது
மண்ணினாற் பத்துக்கோடி
செல்லுமாம் காலந்தன்னிற் செங்கல்லால்
நூறு கோடி
அல்லினாய் குழலாய் கேளாய் ஆலயம்
அடங்கற்கெல்லாம்
கல்லினாற் சமைத்த பேர்கள் கைலை
விட்டகலா ரன்றே"

★ ★ ★

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க
வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் —
விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

★ ★ ★

வானுலகும் மண்ணுலகும்
வாழ மறைவாழப்
பான்மைதரு செந்தமிழ்
பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர
மூன்று விழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி
அஞ்சலிசெய் கிற்பாம்.

மகா கும்பாபிஷேக விழா சிறப்புற வாழ்த்தும்

TWINKLE STAR
CHITS AND FINANCE
173, COLOMBOGAM ROAD,
CHUNDIKULI, JAFFNA.
T.P. 021-2448

(சி/11676)

மெடி எயிட்ஸ்
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

காவேரி சீயாக்காய்ப் ,பவுடர்,
கந்தசாமி அன் சன்ஸ்
ஆடியபாத வீதி, நல்லூர் மார்க்கட்.

உதயன்

## சுகநலமும் போரும்

நாளை ஏப்ரல் ஏழாம் திகதி உலக சுகாதார தினமாகும். 1948 ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதை ஒட்டியே இத்தினம் பிரகடனப் படுத்தப்பட்டது எனினும், உலக நாடுகளின் சுகாதாரப் பிரச்சினைகள் அல்லது சுகாதாரத் தேவைகளை முன்வைத்து, குறிப்பிட்ட தொனிப்பொருளை முன்னிறுத்தி, அதற்கான செயல் திட்டங்களை அமுல் செய்வது இப்போதைய வழக்கமாகும்.

"பாதுகாப்பான இரத்தம் என்னுடனேயே ஆரம்பமாகிறது" என்பதே நாளைய சுகாதார தினத்தின் தொனிப் பொருளாகும். இது எமது குடாநாட்டுக்கும் பொருத்மான ஒன்றே சுகாதார மற்றும் வைத்திய சேவை வட்டாரங்கள் மட்டுமன்றி மக்களும் அக்கறை கொள்ள வேண்டிய ஒன்றாகும் இது.

எங்கள் பிரதேசம் போரினால் பாதிக்கப்பட்ட பகுதி. பல ஆண்டுகளாக சுகாதார வசதிகளும் வளங்களும் குன்றிப் போயுள்ள பிரதேசம். அதனால் நோய்கள் மலிந்து சுகநலம் குன்றிய மக்களே அனேகர் என்ற கவலைக்குரியநிலை தோன்றியுள்ளது

இரத்தம் உடல் இயக்கத்துக்கும் அதன் நலத்துக்கும் எவ்வளவு முக்கியமானது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆகையால் இரத்தத்தைப் போதியளவு பெறக்கூடிய போசாக்கில் கவனம் செலுத்த வேண்டியது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட பொறுப்பாகும். அதில் அக்கறையில்லாது இருப்பின் விளைவு ஆபத்தே.

போசாக்கான சமன்சீர் உணவை உட்கொள்ளக்கூடிய நிலையில் தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் மக்களில் பெரும் பங்கினர் இல்லை என்பதனையே புள்ளி விவரங்கள் மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன.

சுமார் நான்குவருடங்களாகப் போர் ஓய்ந்திருந்த குடாநாட்டிலேயே, சிறுவர்களினதும், கர்ப்பிணித் தாய்மார்களினதும் போசாக்கின்மை மட்டம் மிகவும் உயர்ந்திருக்கிறது. பிந்திய தகவல்களின் பிரகாரம் குடாநாட்டில் கர்ப்பிணித் தாய்மாரில் 75 சதவீதத்தினர் இரத்தச் சோகையால் — நல்ல இரத்தக் குறைவினால் — பாதிக்கப்பட்டுள்ளனர்!

குடாநாட்டிலேயே இந்த நிலைமை என்றால், அரசாங்கத்தின் பொருளாதாரத் தடைக்கு உட்பட்டிருக்கும் வன்னிப் பிரதேசத்தில் வாழும் மக்களின் போசாக்கின்மை எந்தளவுக்கு உயர்ந்து நிற்கும் என்று சொல்ல வேண்டியதில்லை

நாளை உலக சுகாதாரதினத்தின் தொனிப்பொருள் போசாக்குடனும் தொடர்பு உடையது. ஆகையால் போசாக்கின்மை நீங்குவதற்கான சூழலைத் தமிழ்ப்பகுதிகளில் உருவாக்குவதற்கு உலக சுகாதார நிறுவனம் போன்ற சுகாதாரத்தில் அக்கறையுள்ள சர்வதேச அமைப்புகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

சுருக்கமாகச் சொல்வதானால் தமிழர்களின் உரிமைகளை வழங்கி, போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்குத் துரித நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இது விவகாரத்தை வெறுமனே அரசியலாகவோ உள்நாட்டு விவகாரமாகவோ பார்க்காது வருங்கால சந்ததி ஒன்றின் சுகநலம் என்று கருதி, ஐ. நா அலகுகள் செயற்பட வேண்டும். சுகநலம் அமைதிக்கு ஒரு பாலம் என்ற கோட்பாட்டுக் கண்ணாடியைப் போட்டுப் பார்த்து செயலாற்றுவது பெரிதும் உகந்ததாகும்.

# உலகியல் கட்டுகளை அவிழ்த்து விட்டு நல்லூர்த் தேரடியில் சித்தரான செல்லப்பர்

நல்லூர்த் தேரடிச்சித்தர் செல்லபப சுவாமிகளை அறியாதார் எவருமில்லை. நல்லூர் வெளி வீதியில் தென் கிழக்கு மூலையில் அவருடைய சமாதி இன்றும் அருளொளி பரப்புவதை யாவரும் அறிவர். இந்த இடத்திலே தான் அவருடைய பெற்றோரான வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் என்பவரும், அவருடைய துணைவியார் பொன்னார் என்பவரும் வாழ்ந்தனர். 1860 ஆம் ஆண்டளவில் இவர்கள் செல்லப்பரைப் பெற்றெடுத்தனர். ஆரம்ப வரலாறுகள் அறிந்து கொள்ள முடியவில்லை; அது அவசியமுமில்லை, ஏனெனில் மகான்களுடைய வரலாறுகள் அவர்கள் மூலமாக வெளிப் படுத்தப்படுவதுமில்லை. "நதி மூலம் ரிஷிமூலம் பார்க்கக் கூடாது" என்பதுமொருகருத்தாகும்.

செல்லப்பர் சிறுபிராயத்தில் ஓரளவு கல்வியறிவு கைவரப்பெற்றிருந்தமையால் அவருக்கு "ஆராய்ச்சி" உத்தியோகம் கிடைத்திருந்தது. சிறிது காலத்தின் பின்னர் அவர் தன்னை மறந்து தன் நாமம் கெட்டு, பவம் எனும் பங்கம் நீங்கி, பயிலருட்குருத் துண்டாகி, அவம் எனும் கிளைகள் நீக்கி, சிவம் எனும் விளைவு உண்டாகும் பொருட்டு விசர்க்கோலம் கொண்டு தேடுவதும், திகைப்பதும், ஓடுவதும், ஆடுவதும், பாடுவதுமாக ஆனந்தக் கூத்தாடினார். சொல்லுக்கடங்காத இவரின் சூரத்தனங்களைக்கண்ட தாய், தந்தையர் இவரை வீட்டில் கட்டி வைத்தனர். அந்தக் கட்டுக்கள் உலகியல் கட்டுக்களை அவிழ்ப்பதற்காகப் போடப் பட்ட கட்டுக்கள் என்பதை அன்று யாரும் அறிந்திருக்கவில்லை.

"தாரமும் குருவும் தலை எழுத்து" என்பார்கள். கட்டிக் கிடந்த கன்றைத்தேடி வரும் பசுவைப் போல அன்று நல்லூர் வீதிகளில் நடமாடித் திரிந்த நீதிவான் சுவாமி முத்தியானந்தர் என்னும் கடையிற் சுவாமியார் கட்டிக் கிடந்த செல்லப்பரை உற்று நோக்கி திருவருட்கடாட்சம் நல்கி "முற்றி விட்டது



செல்லப்ப சுவாமிகளின் குருபூசை தினம் இன்றாகும்.

அவிழ்த்து விடுங்கள்" எனக் கூறினார். கட்டிலிருந்து விடுபட்ட செல்லப்பர் மெல்ல மெல்லச் சென்று தேரடியில் அமர்ந்தார். திருக்கூட்டம் அவரைச் சூழ்ந்தது. சில வேளைகளில் சிரித்தபடி உன்மத்தராகி நல்லூர் வீதிகளில் திரிவார்; வருவோர் போவோரை வசைபாடுவார்; பசி வந்த போது மக்கள் எவரேனும் கொடுப்பதை வாங்கி உண்பார்.

கறுத்தமேனி, கந்தைத்துணி, உரத்தபேச்சுஉன்மத்தகுணம், முட்டாள் முகம், எட்டாத சித்து, பணியாத பாவனை. துணிவான மோன நிலை, இப்படியே தாம்பூண்ட விசர்க் கோலத்தின் அசல் வடிவாக, நாடகத்தால் தம் அடியார் நடுவே நாற்பது வருடங்கள் நடித்துவிட்டுச் செல்லப்பர் 1915 ஆம் ஆண்டு பங்குனி மாதம் அச்சுவினி நட்சத்திர நாளன்று சமாதியடைந்தார்.

### சீடன் யோகர்

செல்லப்ப சுவாமிகள் உலகிற்குத் தன்னைக் காட்டிக் கொள்ளாது மறைந்துபோன ஒருமகான். ஆனால் அவர் தமது ஒரே ஒரு சீடராக யோகர்சுவாமிகளை எமக்குத் தந்துவிட்டுச் சென்ற தவப் பேறு எப்போதுமே உவப்பதற்குரியதாகும். ஆத்மீகத் தாகம் கொண்டு அலைந்த யோகர் சுவாமிகள் நல்லூர்த் தேரடியில் செல்லப்ப சுவாமிகளைச் சந்தித்தார். செல்லப்பசுவாமிகளின் நயனதீட்சை காந்தமென யோகர்சுவாமிகளைக் கவர்ந்தது. அப்போது இளைஞனாக இருந்த யோகநாதனைக் கண்டதும் செல்லப்ப சுவாமிகள் சீறிச் சினந்து ஏசிப் பேசி, எரிந்து விழுந்து "ஆரடா நீ?" என்று அதட்டினார். அது அமுதமொழியாகச் சீடரின் உள்ளத்தில் பதிந்தது. இது தன்னை அறியக் கூறிய அடிப்படைத் தத்துவமாக யோகநாதன் கருதினார். அதன்பின்னர் கருணைகூர்ந்து "நல்லது வா, உன்னைப்போல் ஆளைத் தான் பார்த்துக்கொண்டிருந்தேன்" என்று கூறித் தனது ஆத்மீக ஈர்ப்புப்புலத்தினுள் அகப்படுத்திக் கொண்டார்.

தொடர்ந்து "ஆரடா நீ?" எனும் வினாவிற்குரிய விடை காணும் போதனைகளாக "தேரடா உள்" "தீரடா பற்று" "பாரடா வெளியில்" என்பவற்றை வலியுறுத்தினார் இவை போன்று இன்னும் பல போதனைகளையும் அவ்வப்போது செல்லப்ப சுவாமிகள் தமது சீடனுக்குப்

**நா.க.சண்முகநாதபிள்ளை**

போதித்தார். இந்த ஞான உபதேசங்களே யோகர் சுவாமிகளை இன்று உலகமே போற்றும் மகா ஞானியாக உருவாக்கியுள்ளது என்பதில் சந்தேகமே இல்லை.

யோகிகள், சித்தர்கள், முனிவர்கள், ஞானிகள் என்போர் யாவரும் ஒரு திருக்கூட்டத்தினரேயாவர். இவர்கள் தமது ஆத்ம சக்தியால் மக்கள் மத்தியில் இறை உணர்வை ஏற்படுத்தி. உயிர்களின் ஈடேற்றத்துக்கும், உலக சேமத்திற்குமாகத் தம்மை அர்ப்பணிப்பர். இந்த வகையில் நமது ஈழ நாடு பல ஞானவான்களைப் பெற்ற புண்ணிய பூமியாகத் திகழ்கிறது. அவர்கள் விட்டுச் சென்ற சிந்தனைக் களஞ்சியங்கள், அருள் நினைவுகள், அவர்கள் வாழ்ந்த, திரிந்த, ஆனந்தக் கூத்தாடிய, உறங்கிய, பாதங்கள் பட்ட இடமெல்லாம் அவர்களின் சுவாசதூபம் சூழலை பரிசுத்தமாகவே வைத்திருக்கின்றது.

"நல்லூரில் கூவிளத்தின் நன்நிழலில் வீற்றிருந்தால் எல்லோரும் செல்லப்பர் இன்னருளை உணர்வீர்கள்"

இது ஓர் அனுபவ உண்மையாகும்.

*

# யுத்தப் பிரதேசத்தில் அகப்பட்டுள்ள பளைப் பகுதி மக்கள் 4,000 பேர்!

## 6 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்வு

கடந்த ,26 ஆம் திகதி இரவு வடமராட்சிக் கிழக்குப் பச்சிலைப்பள்ளிப்பகுதிகளில் ஆரம்பித்த யுத்தம்இருபகுதிகளிலும் இருந்து இதுவரை 6 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களைப் இடம்பெயர வைத்துள்ளதுடன் மேலும் 5 ஆயிரம் பேரை யுத்தப் பிரதேசங்களில் நிர்க்கதியாக்கிஉள்ளது.

இந்த யுத்தத்தில் படையினர், விடுதலைப்புலிகள் தவிர அப்பாவிப் பொதுமக்களில் 15 பேர் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர். 70 பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

**- கேசரி -**

யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த யுத்தத்தினால் யாழ். கண்டிவீதி போக்குவரத்து கொடிகாமத்துக்கும், பளைக்கும் இடையில் துண்டிக்கப்பட்டதால் பளையிலுள்ள மக்கள் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து அங்குள்ள மக்களை 2 ஆம் திகதி ஞாயிறு காலை 6 மணியிலிருந்து பகல் 2 மணிக்கு முன் பளை கடற்கரை வீதி வழியாக கிளாலிக்கு வந்து சேருமாறு விடுதலைப்புலிகள் அறிவித்தனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### உதய வாக்கு

உட்பகையை விட வெளிப்படையாகக் கடிந்து கொள்வது நல்லது.

- ரிச்சட் ஸ்டில்

### நாளை

பங்குனி 25
வெள்ளிக்கிழமை
திதி: திருதியை
முன்னிரவு 7.43 வரை.
நட்சத்திரம்: பரணி
பிற்பகல் 1.35 வரை.
கார்த்திகை விரதம்
சுபநேரம்: 6 07 – 7.37
ராகுகாலம்: 10 37 –12 07
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

## சாயி சிந்தனை

எந்த மதமும் தீயதைப் போதிப்பதில்லை. எல்லா மதங்களும் மற்றவர்க்கு உதாரணமாக, வழிகாட்டும் வகையில் தான் விளங்குகின்றன. நீங்கள் அதனை உங்கள் அன்றாட வாழ்க்கையில் எடுத்து விளக்குகிறீர்கள். ஒரு தட்டில் சப்பாத்தியையும், உருளைக்கிழங்கையும் வைத்துவிட்டு நூறு முறை அதனை "சப்பாத்தி பகோடோ" எனக் கூறினாலும் உன் வயிறு நிரம்பாது அதனை எடுத்து உண்ண வேண்டும். அது போல பிறருக்கு எடுத்துச் சொல்வதை விட, உனது வாழ்க்கையில் ஒன்றையாவது நடைமுறைப்படுத்த வேண்டும். சொல்லியிருக்கும் தத்துவங்களை நடைமுறையில் கொண்டுவர முயற்சி செய்யுங்கள். இவ்வாறு செய்தால் இந்நாடு வளரும்; வளர்ச்சிபெறும். புத்தக அறிவும் மேலோட்டமான அறிவும் இருந்தால் மட்டும் போதாது. நாம் புத்திசாலித்தனத்திலும் அறிவிலும் வளர்ந்துவருவதாக நினைக்கிறோம் இல்லை, அதற்குப் பதில் நமக்கு இருக்கும் அறிவையும் கெடுத்துக் கொள்கிறோம்.

(ஆதாரம்:- சனாதன சாரதி)

## தவக்காலச் சிந்தனை

(முப்பதாம் நாள்)

"கடவுள் ஒருவரே அவர் தரும் பெருமையை நாடாது ஒருவர் மற்றவரிடமிருந்து பெருமையைத் தேடிக் கொள்கிறீர்களே."

ஆம் நாம் இவ்வுலகப் பற்றுள்ளவர்கள். மனிதர் தரும் மதிப்பிற்காய் மாடாய் உழைக்கின்றோம். அழிந்து போகும் செல்வத்திற்காய் அல்லும் பகலும் அலைகின்றோம். நிலையில்லா இன்பத்திற்காய் நித்திய வாழ்வை இழக்கின்றோம். இத்தவக் காலத்தில் இறைவன் எமக்குக் கூறுவது என்ன என்று சிந்திக்கின்றோமா?.

பிறர் எமக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புவதை விடுத்து, மற்றவர்கள் தரும் பெருமையை மறந்து இறைவன் தரும் முடிவில்லா வாழ்விற்காய் உழைப்போம்.

அகதியாய் அலைந்து ஆறுதல் இழந்து தவிப்போரில், அன்பிற்காய் ஏங்குவோரில், நோயுற்று இருப்போரில், நொந்தழுது வருந்துவோரில், சிறையில் வாடுவோரில் இறைவனைக் காண விழைவோம். அடுத்தவனைக் கெடுக்காது சுடுசொற்களால் வதைக்காது அமைதிக்கரம் கொடுப்போம்.

வாழ்வது நானல்ல; என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார் என உணர்ந்து எல்லோரையும் மதித்து வாழ்வோம்.

மரியா
(இளவாலை)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Bajaj KB 100, (2Stroke) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தினமும் மாலை 4 மணிக்குப் பின் பார்வையிடலாம் 44, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (75098)

Sony Audio - Vedio CD Player (Model. MCES-70), Pioneer, Equalizer (Model-SG - 300) Pioneer Ampilfier (Model - A 117-210w) Technics - Honey Comb Disc (Model F - 90) 320W பொக்ஸ்–அனைத்தும் Japan தொடர்பு: 11/5, சந்தன மாதாஒழுங்கை, சுண்டுக்குளி (75116)

### உடன் தேவை

நன்கு பராமரிக்கப்பட்ட, உடனடியாகப்பாவிக்கக்கூடிய நிலையில் உள்ள போட்டோ பிரதி இயந்திரம் தேவை. விலை. விவரங்களுடன் தொடர்புகொள்ளவும், தொ.பேசி. இல. 021-3220. இல. 021-3430. (75067)

### தவறிவிட்டது

4 ஆம் கட்டையடி, காங்கேசன்துறை வீதி, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி இராசரத்தினம் என்பவரது தேசிய அ. அட்டை (இல. 0442152390 V), விசேட அ. அட்டை (இல. 0902026517) என்பன 3- 4- 2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும். [75121]

# மரண அறிவித்தல்கள்

## விநாயகமூர்த்தி அரியநாயகம்

வடலியடைப்பைச் சேர்ந்த விநாயகமூர்த்தி அரியநாயகம் 04—04—2000 அன்று வன்னியில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வன்னியில் நடைபெறும்.

தகவல்:
க. தனேஸ்வரி
[சகோதரி]

சங்குவேலி.
உடுவில். [75126]

## டாக்டர் குமாரசாமி மருதப்பு (மகேந்திரன்)

M. B B. S (Cey) F. R. C. S (London)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட டாக்டர் குமாரசாமி மருதப்பு அவர்கள் 22-03-2000 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி—செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், டாக்டர் யாழினி (லண்டன்) அவர்களின் அன்புக் கணவரும், திஷியானி, மகிபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமசுந்தரம் (ஆஸ்திரேலியா) கமலாதேவி (அமெரிக்கா), செல்வராணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரஞ்சினி (ஆஸ்திரேலியா) யோகசுந்தரம் (அமெரிக்கா) ஜெகதீஸ்வரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25 - 03 - 2000 சனிக்கிழமை லண்டனில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. சோமசுந்தரம்
(சகோதரன்)
ஆஸ்திரேலியா

(75131)

# அதிசயக் கோவா!

தென்மராட்சி, ஏப்ரல் 6

ஊரெழுப் பகுதியில் தோட்டம் ஒன்றில் உற்பத்தி செய்யப்பட்ட கோவா கரும் நாவல் நிறத்தில் காணப்படுகிறது.

சாவகச்சேரிச் சந்தைக்கு இந்தக் கோவா நேற்று விற்பனைக்கு வந்த போதிலும் எவரும் வாங்க முன்வரவில்லை. சந்தைக்கு வந்தவர்கள் அந்தக் கோவாவை அதிசயமாகப் பார்த்துவிட்டுச் சென்றனர். அதன் மடல் ஒன்றை எடுத்துச் செல்வதிலேயே ஆர்வம் காட்டினர்.

தமது தோட்டத்தில் இம்முறை இத்தகைய மூன்று கோவாக்கள் உற்பத்தியானதாக உற்பத்தியாளர் தெரிவித்தார்.

இந்த அதிசயக் கோவாவின் ஒருமடல் எமது செய்தியாளரால் உதயன் பணிமனைக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. (இ-117)

# யுத்தப்பிரதேசத்தில்...

(7 ஆம் பக்கத் தொடர்)

விடுதலைப்புலிகளின் காலக்கெடுவை அடுத்து மக்கள் பளையிலிருந்து வெளியேறத் தொடங்கினார்கள். இவ்வாறு வெளியேறியவர்களில் ஆயிரம் பேர் மட்டுமே கிளாலி வழியாக கொடிகாமம் பகுதிக்கு அனுமதிக்கப்பட்டனர்.

ஏனையவர்கள் கிளாலியிலுள்ள காணிக்கை மாதா கோயில் மற்றும் கிளாலி அ. த. க. பாடசாலை போன்ற இடங்களில் படையினரால் தங்க வைக்கப்பட்டனர்.

325 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 114 பேர் இவ்வாறு தங்க வைக்கப்பட்டனர்.

### மக்கள் விசனம்

இதேவேளை பளைப் பிரதேச செயலர் பிரிவில் பளை நகர், புலோப்பளை, அல்லிப்பளை, மாசார், சோரன்பற்று, அம்பகாமம், தர்மக்கேணி, வண்ணாங்கேணி, பெரியபளை ஆகிய இடங்களில் 900 குடும்பங்களைச் சேர்ந்த 4000பேர் வெளியேற முடியாத நிலையில் பணயக் கைதிகள் போன்று வைக்கப்பட்டுள்ளனர்.

போர் நடைபெறும் பிரதேசங்களிலுள்ள மக்களை வெளியேற விடாது அவர்களின் விருப்பங்களுக்கு மாறாக மனிதக்கேடயமாக வைத்திருப்பதனை எவர் செய்தாலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது சர்வதேச சட்ட திட்டங்களுக்கு முரணான செயலாகும் — என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

பொது மக்கள் தாங்கள் விரும்பிய இடங்களுக்கு செல்வதை எவரும்தடுக்ககூடாது என்பதே மனிதஉரிமை மரபு.

இந்த மக்களை வெளியேற்றி பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்வது யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச நிறுவனங்களின் தலையாய பணியாகும்.

இங்குள்ள தொண்டர் நிறுவனங்கள் எதுவும் இந்த விடயத்தில் உரிய அக்கறை இன்றி இருக்கின்றன என்று மக்கள் விசனப்படுகின்றனர்.

### 2 ஆயிரம் ரூபா எதற்கு?

தற்பொழுது இடம்பெயர்ந்த மக்களுக்கு இரண்டாயிரம் ரூபா உடனடியாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது —

இந்தப் பணம் மக்களைச் சென்றடைவதற்கு முன் அவர்கள் வழமையான வாழ்க்கைக்கு திரும்பிவிடுவார்கள் — ஏனென்றால் இடம்பெயர்ந்தவர்கள் பலர் தமது வீட்டிலிருந்து எந்த ஒரு பொருளையும் தம்முடன் எடுத்து வரவில்லை, நலன்புரி நிலையங்களிலும், உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இவர்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யப்படுவதற்கு உடனடி உதவி தேவை — ஆனால் இந்த இரண்டாயிரம் ரூபா அவர்களுக்கு போதாது. என்றாலும் இந்தப்பணம் அவர்களின் கையில் தாமதம் இன்றிக்கிடைத்தால் ஓரளவாவது ஆறுதல்தான்.

இதே வேளை இந்த இரண்டாயிரம் ரூபா மீளக்குடியமர்ந்தபின்வழங்கப்படும்5 ஆயிரம் ரூபாவிலிருந்தே வழங்கப்படவுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அதாவது தற்பொழுது இடம்பெயர்ந்து இருப்பவர்கள் மீளக்குடியமரும் போது அவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அதில் இந்த 2 ஆயிரம் ரூபா கழிக்கப்பட்டு 3 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்படும். (இ—ரி)

# யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனை திறப்பு விழா

## 2000 - 04 - 06

கூட்டுறவுப் பாரம்பரியத்திலேவரலாற்றுச் சாதனைகள்படைத்தமுனுபெரும் வழிகாட்டிகளையும். அவர் வழி சென்று கூட்டுறவு விழுமியங்களைக் கட்டி வளர்த்த முத்திரை பதித்த கூட்டுறவாளர்களையும் கொண்டது யாழ்.மாவட்டம். இக்கூட்டுறவுத்துறைஅதன்வழியேசென்று ஆக்கபூர்வமான அடைமானங்களை அனுபவிக்க, ஆதரவுக்கரம் நீட்டியும், தோன்றாத் துணையாகவும் வழி நெடுக தடம் பதித்த கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ஒரு புதிய பணிமனையை தனது சொந்தமாக்கிக் கொண்டு பிரவேசிக்கும் இந் நன்னாள் இம் மாவட்டத்தில் கூட்டுறவாளர்களுக்கு பெருமை சேர்க்கும் பெருநாள்

எமது துறை புகழாரம் பெறும்போது அப் புகழ்ச்சிக்கும், பாராட்டுக்கும் உந்து சக்தியாக உழைத்த திணைக்கள அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் அனைவரையும் நன்றியோடு நினைவிருத்த இக் கூட்டுறவுச் சமூகம் என்றும் கடப்பாடுடையதாகும். யாழ்ப்பாணத்தின் கூட்டுறவுத்துறை வரலாற்றிலே பனை, தென்னை வளக் கூட்டுறவுத்துறை கால அளவீட்டிலே மூன்றாவது தசாப்தத்தை மட்டும் எட்டுகின்ற போதும் காத்திரமான படையல்களை முன்னளித்திருக்கின்றது. இம் மகத்தான பணியில் வியர்வைத்துளி சொட்ட உழைக்கும் சமூகமும், அயராது அரும் பணி செய்த திணைக்கள சமூகமும் இரு விழிகளே.

பட்டிதொட்டிகள் எல்லாம் சென்று, தட்டிக் கொடுத்து இக் கூட்டுறவுத்துறை ஆழ வேரூன்ற அரிய பணி செய்த அனைவரையும், ஒரு கணம் இதயங்களில் இருத்தி நன்றிப் பூக்களால் வந்தனை செய்யும் நன்னாளாகவும் இதைப் பூசிக்கின்றோம்.

கட்டடங்களுக்குள் கட்டுப்படாது இதய வாயில்களை எந்நேரமும் எமக்காகத் திறந்து வைத்த கூட்டுறவு உதவி ஆணையாளர்களையும், அவர்சார்ந்த அலுவலர்களையும் நன்றிப்பெருக்கால் பாராட்டுகின்றோம்.

வலிமையான பிரயத்தனங்களின் பயனாக, நீண்ட பல தசாப்தங்களின் பின் ஒரு பணிமனை இத் திணைக்களத்திற்கு உரித்தாக்கப்படுகின்றது. புத்தாயிரமாண்டில் கண்டடையப்பட்ட சாதனை என்றாலும் மிகையன்று; ஈடுபட்டு உழைத்தவர்களின் மகிழ்வில் நாமும் பங்காளிகளாகின்றோம்.

புனிதம் பொருந்திய இத் துறையால் இம் மண் வளம்கொழிக்க தொடர்ந்தும் உழைப்போம். கூட்டுறவாளர்களால் திணைக்களமும், திணைக்களத்தால் கூட்டுறவாளர்களும், பெருமையும் பலமும் பெற பங்காற்றுவோம். அகமகிழ்வுடன் புதிய பணிமனையில் பிரவேசித்து பணியைத் தொடரும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள். மாவட்ட அலுவலர்கள், தலைமையகப் பரிசோதகர்கள், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள். பணி நிலையில் உள்ள அனைவரையும் இந் நன்னாளில் வாழ்த்தி. அவர் தம் பணி சிறக்க ஆண்டவன் ஆசி வேண்டி அமைகின்றோம்.

யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரியாலை | ,, | ,, | ,, | ,, | ,, |
| கோப்பாய் | ,, | ,, | ,, | ,, | ,, |
| வேலணை | ,, | ,, | ,, | ,, | ,, |
| ஊர்காவற்றுறை | ,, | ,, | ,, | ,, | ,, |
| கோண்டாவில் | ,, | ,, | ,, | ,, | ,, |
| மானிப்பாய் | ,, | ,, | ,, | ,, | ,, |
| சுன்னாகம் | ,, | ,, | ,, | ,, | ,, |
| தெல்லிப்பழை | ,, | ,, | ,, | ,, | ,, |
| பண்டத்தரிப்பு | ,, | ,, | ,, | ,, | ,, |
| சங்கானை | ,, | ,, | ,, | ,, | ,, |
| காரைநகர் | ,, | ,, | ,, | ,, | ,, |
| அச்சுவேலி | ,, | ,, | ,, | ,, | ,, |
| கரவெட்டி | ,, | ,, | ,, | ,, | ,, |
| பருத்தித்துறை | ,, | ,, | ,, | ,, | ,, |
| சாவகச்சேரி | ,, | ,, | ,, | ,, | ,, |
| கொடிகாமம் | ,, | ,, | ,, | ,, | ,, |
| பளை | ,, | ,, | ,, | ,, | ,, |

யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபி.கூட்.சங்கங்களின் கொத்தணி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வலிகாமம் | ,, | ,, | ,, | ,, | ,, |
| தென்மராட்சி | ,, | ,, | ,, | ,, | ,, |
| வடமராட்சி | ,, | ,, | ,, | ,, | ,, |

யாழ். மா. சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனை வைத்திய சேவை கூ. சங்கம்

வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

## "பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுத்துறை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றது"

(சி/11677)

# பாணின் விலையைக் குறைக்காவிடில் மா விநியோகிப்பதை நிறுத்துங்கள்!

## நுகர்வோர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

பாணின் விலையைக் குறைக்க பேக்கரி உரிமையாளர் சங்கம் இணங்காவிட்டால் அவர்களுக்கு மா விநியோகிப்பதை செயலகம் நிறுத்த வேண்டும். பாண் உற்பத்தி நிறுத்தப்பட்டால் பொதுமக்களுக்கு தாராளமாக மாவை விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் பாண் விலை நிர்ணய விவகாரம் தொடர்பாக விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பாணின் நிறை, விலை போன்றவற்றை நிர்ணயிப்பது தொடர்பாக மேலதிக அரச அதிபரின் அழைப்பின் பேரில் ஒரு கூட்டம் யாழ். கச்சேரியில் இடம்பெற்றது. இரு முறை இடம்பெற்ற கூட்டத்தில் யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத்தலைவர் செயலாளர், நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டு முன்வைத்த கருத்துக்கள் வருமாறு:-

பாணிற்குத் தேவையான கோதுமை மா மானிய விலையில் அரச அதிபரினால் விநியோகிக்கப்படுகின்றது. மா தவிர்ந்த வேறு எந்தப் பொருளையும் தனியார் வர்த்தகர் ஒருவரோ, சங்கங்களோ, யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்ய முடியும். கோதுமை மா முக்கியமாக பாண் தயாரிப்பதற்காகவும் வேறு உப உணவுப் பொருள்கள் தயாரிப்பதற்காகவும்அரச அதிபர் ஊடாக பல நோக்கு கூட்டுறவு சங்கங்களிற்கும் பேக்கரி உரிமையாளர்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றது. இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் கிடைக்கும் விலைக்குச் சமனான விலையில் மாவைஇங்கு பெறமுடியும். கப்பல் கட்டண உயர்வு காரணமாக இதன் விலை உயர்த்தப்படவில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது.

பேக்கரி உரிமையாளர் சங்கம் பாண் உற்பத்தி செய்வதற்குக் குறிப்பிட்டளவு கோதுமை மா வேண்டும் என்ற வேண்டுகோளின் அடிப்படையில் குறிப்பிட்டளவு கோதுமை மாவை அரச அதிபரின் அனுமதியுடன் கப்பலில் இருந்து இறக்கப்பட்ட உடனேயே பெற்றுவிடுகின்றனர். மானிய விலையில் பெறப்பட்ட இக்கோதுமை மாவே பாண் உற்பத்தியில் 4/5 பங்கு உள்ளடாகும் இத்துடன் பாண் தயாரிப்பதற்கான இகரபதப்படுத்தும் உள்ளீடுகளை யாழ்ப்பாண திறந்த சந்தையில் பெற்று உற்பத்திக்காக வழங்கிய கோதுமை மாவிலேயே உற்பத்தி செய்கின்றனர். பாண் தவிர்ந்த ஏனையவற்றிற்கான கோதுமை மாவும் மானிய விலையிலேயே கிடைக்கிறது. அவற்றின் விலை பற்றி கலந்துரையாடவில்லை.

தற்போது350 கிராம்பாண் உற்பத்தி கூட உண்மையில் 310–320கிராம்நிறையிலேயே காணப்படுகின்றது இது பற்றி எமது சங்கம் கேட்ட போது 350 கிராம் பாண் தயாரிப்பதில் தமக்கு இலாபமில்லை. இதனால் சில பேக்கரி உரிமையாளர்கள் 310 – 320 கிராம் உற்பத்தி செய்வதை தம்மால் தடுக்க முடியவில்லை எனவும் கூறப்பட்டது. 350 கிராம் நிறையுடைய பாண் 8. 50 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்ட நிலைமை திருந்தும் போது பாணின் விலையும், நிறையும் மறுபரிசிலனை செய்யப்படுமென முன்னர் அரச அதிபரால் எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப தற்போது 450 கிராம் பாண் இலங்கையின் சகல பகுதிகளிலும் விற்பனை செய்யும்விலையில் விற்பனை செய்ய முடியும் என நுகர்வோர் சங்கம் தமது கருத்தை வெளியிட்டது. ஆயினும் யாழ்ப்பாணத்தில் நிலவும் இன்றைய அசாதாரண சூழ் நிலையைக் கருத்திற்கொண்டு, பேக்கரி உரிமையாளர் சங்கத்தினர்கொடுத்த விலைப்பட்டியல் அட்டவணையை ஆதாரமாகக் கொண்டு 450கிராம் பாணிற்கான விலைநிர்ணயம் செய்ய மேலதிக அரச அதிபர் முன்வந்தார்

450 கிராம் பாண் ரூபா 9.00க்கு மேல் கூட்டப்படுவதை எக்கட்டத்திலும் யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் ஆதரிக்கவில்லை. பாண் இன்றைய காலகட்டத்தில் ஏழை. பணக்காரன் என்ற வேறுபாடின்றி பலரது பிரதான உணவாக கொள்ளப்படுகிறது. வருமானமின்மை. நேரமின்மை, நேரடியான பாவனை போன்ற காரணங்களினால் பாண் அத்தியாவசிய உணவாக இருப்பதால் இதன் விலையை உயர்த்தாது 450 கிராம் பாணை விநியோகிப்பதற்கான ஒழுங்குகளை அரச அதிபர் எடுக்க வேண்டும் என நுகர்வோர் சங்கம் கோரியது. இருந்த போதும் மேலதிக அரச அதிபர் 450 கிராம் பாணின் உச்ச விலை ரூபா 10.00 ஆக நிர்ணயித்தார். (நாட்டின் சூழ்நிலை காரணமாக)—

இக் கலந்துரையாடல் பற்றி பத்திரிகைகளில் பேக்கரி உரிமையாளர் சங்கமும் மேலதிக அரச அதிபரும் விவரங்களை வெளியிட்டு தங்கள் தங்கள் நிலைப்பாட்டை முன் வைத்தனர். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கமும் சங்க உறுப்பினர்களோடு கலந்துரையாடியது. மக்களைப் பாதிக்கும் விலை உயர்வை எப்போதும் எதிர்க்கவும் அவை ராடாச தேவை ஏற்படின் நுகர்வோர் தமது கண்டனத்தை தெரிவிப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதெனவும் கலந்துரையாடலில் முடிவு எடுக்கப்பட்டது.

மானிய விலையில் மாவைப் பெற்றுக்கொள்ளும் பேக்கரி உரிமையாளர் தான்தோன்றித்தனமாக விலையிட்டுக் கொள்வதற்கு அரச அதிபர் எவ்வாறு அனுமதி வழங்குவார். அவர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரச அதிபருக்கு இல்லையா? இம்மாதம் 15 ஆம் திகதியுடன் பாண் உற்பத்தியை நிறுத்த உத்தேசித்துள்ள பேக்கரி உரிமையாளர்கள்சங்கத்திற்கு தொடர்ந்தும் கோதுமை மா வழங்கப்பட்டால் 15 ஆம் திகதி அன்றும், அடுத்து வரும்நாள்களிலும் கோதுமை மாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும்குறைந்தவிலையில் பாண் தான் கிடைக்கவில்லை என்றால் தாராளமாக கோதுமை மாவை மக்கள் பெறுவதற்கான ஒழுங்குகளை அரச அதிபர் செய்ய முன்வரவேண்டும்.

மேலதிக அரச அதிபரின் கோரிக்கைக்கு இணங்கிய பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களைப் பாண் உற்பத்தியில் ஊக்கப்படுத்துவதோடு தமது பேக்கரிகளைப் பயன்படுத்தாது விட்டிருக்கும் பல நோக்குகூட்டுறவுச் சங்கங்கள் உடனடியாக பாண் உற்பத்தியில் இறங்க வேண்டும். இல்லையேல் பாண் உற்பத்தியில் ஏற்படும் மோசடியை எதிர்த்து நுகர்வோராகிய மக்கள் போராட வேண்டிய கட்டம் ஏற்படலாம் — என்று உள்ளது. (ஐ)

---

# அறிவித்தல்

**வலி. கிழக்கு வட பகுதி ப. நோ. கூ. சங்கம் (வ-து)**
**அச்சுவேலி**

**கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான**

## கிளைப் பொதுச் சபைக் கூட்டம்

**காலம்: 2000. 04. 09.**

வடக்கு—கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட துணைவிதிகளின் 23 ஆம் பிரிவின் கீழ் வடக்கு—கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உரித்தாக்கப்பட்டும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1998. 05. 19.ஆந் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கிளைக்குழுக்களைத்தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய வலி. கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் 2000. 04. 09 ஆந் திகதி முற்பகல் 10. 00 மணிக்கு ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் நடைபெறும்.

கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏற்கனவே கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும், பொது இடங்களிலும் பார்வையிடலாம்.

கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களைக் குறித்த அறிவிப்புக்களின்படி கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு, சமுகமளித்துத் தங்கள் சனநாயக உரிமைகளைப் பயன்படுத்தி கூட்டுறவு இயக்கத்தினை சனநாயக ஆளுகைகொண்டதாக செயற்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

செ. கு. சண்முகநாதன்
கூ. அ. உ. ஆணையாளர்,
யாழ். மாவட்டம்.

கூட்டுறவு அலுவலகம்,
இல. 18/10, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/11635)

---

# கிளாலியில் தங்கியுள்ளோர் குடி தண்ணீர் இன்றி அவதி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

பளை உள்ளிட்ட பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த சமயம் படையினரால் வழிமறிக்கப்பட்டு கிளாலி மாதா கோயிலில் தங்க வைக்கப்பட்டிருக்கும் பொதுமக்கள் குடிதண்ணீர் இன்றி பெரும் கஷ்டம் அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோடை காலங்களில் இந்தப் பகுதிகளில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவது வழக்கம்.

தற்போது பெரும்எண்ணிக்கையான மக்கள் அங்கு தங்கி இருப்பதால் குடிதண்ணீருக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

ஒரு சில கிணறுகளில் இருந்தே பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நீரைப் பெறவேண்டிய நிலை உள்ளது.

(ஐ-9)

# விஞ்ஞான சங்க அமர்வின் இறுதி நாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் 8ஆவது வருடாந்த அமர்வுகளின் மூன்றாம் நாள் (இறுதி நாள்) நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

முதலாவது அமர்வுக்குத் தலைமை வகிக்கும் பேராசிரியர் கே. சின்னத்தம்பி 'செயல் திட்ட வேலைகள் மூலம் கற்பித்தல் — யாழ்ப்பாணத்து இடைநிலைப்பாடசாலைகள் தொடர்பான ஒரு நோக்கு" என்ற பொருளில் உரையாற்றுவார். இதனைத் தொடர்ந்து பொறியியலாளர் எம். ராமதாசன் 'தொழில் துறைமனப்பாங்குநிர்மாணத் துறை ஒரு கண்ணோட்டம்' என்பது குறித்து உரையாற்றுவார்.

இதன் பின்னர் பௌதிக விரிவுரை மண்டபத்தில் நடைபெறும் இரண்டாவது அமர்வில் சங்கத்தின் செயற்பாட்டுக் குழுக்களின் கூட்டங்களும் வருடாந்தபொதுக் கூட்டமும் நடைபெறும்.

பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் வருடாந்த பொதுக் கூட்டத்துக்கு தலைமை வகிப்பார்.

பிற்பகல் 2 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் பேராசிரியர் பி. பாலசுப்பிரமணியம் 'மரபணுப்பொறியியலும் மரபணுச் சிகிச்சையும்' என்னும் பொருளில் உரையாற்றுவார்.

தொடர்ந்து பரிசளிப்பு விழாவும் நடைபெறும்.

(ஐ-4-ரீ)

# உடற் கல்வி மாணவருக்கு கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

யாழ். பல்கலைக்கழக உடற் கல்வி மாணவர்களுக்கான அவசர பொதுக் கூட்டம் ஒன்று இன்று வியாழக்கிழமை உடற் கல்வி விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக உடற் கல்வி மாணவர் மன்றம் அறிவித்துள்ளது.

(ஐ-3)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சக மாணவி

சுபாசினி சிவகரனின்

அன்புத் தந்தை

**வல்லிபுரம் பரராசா அவர்களின்**

மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இராமநாதன் நுண்கலைத்துறை,
நடனத்துறை இறுதியாண்டு
மாணவிகள்.

(75084)

---

# நீங்கா நினைவினிலே பத்து ஆண்டுகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 — 09 — 1923 | 06 — 04 — 1990 |

திருமதி

**பூவிலிங்கம் எஸ்தர் தங்கரத்தினம்**

பாசத்தின் உறைவிடமே அம்மா!
பண்பின் சிகரமே அம்மா!
இரக்கத்தின் வடிவே அம்மா!
அன்பின் எல்லையே அம்மா!
எங்கு சென்றனை அம்மா!
ஜீவியத்தில் நேசித்தோம்
மரணத்தில் மறவோம்!

பிரிய மகன்
பூ இரவீந்திரலிங்கமும்
சகோதரர்களும்.
(ஜேர்மனி)

பூ. விர்ரர் தியாகலிங்கம்,
3, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(75094)

குதூகல ஆரம்பம்

# துவாரகை தொலைத் தொடர்பகம்

குறைந்த கட்டணம்! நிறைவான சேவை!!
இரவு பகல் சேவை!!!

உங்கள் வீட்டிலிருந்தவாறும் தொடர்பு கொள்ளலாம்.

T. P. No. உள்ளூர்- 070-213074
T. P. No. வெளிநாடு- 0094-70-213074
Fax: 070-213074

உரிமையாளர்: எம். துசியந்தன்

லூர்து மாதா கோயில் வீதி,
தும்பளை,
பருத்தித்துறை. (75099)


## சுகாதார தினம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

உலக சுகாதார தினமான நாளை வெள்ளிக்கிழமை தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை மட்டத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் சிரமதானம் மற்றும் மாணவர்களின் சுகாதார விழிப்புணர்வு தொடர்பான கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

தீவக வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். ஏ. ஒஸ்வேல்ட் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (ஐ-7)

# சமுர்த்திவலய அலுவலகங்களின் திறப்பு விழாக்கள் நாளை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில்இரண்டு சமுர்த்தி வலய அலுவலகங்களின் திறப்புவிழாக்கள் நாளை நடைபெற உள்ளன.

இமையாணன் உடுப்பிட்டி வீதியில் வலயம்—1 சமுர்த்தி அலுவலகத் திறப்புவிழா காலை 9. 30 மணிக்குக் கரவெட்டி பிரதேசச் செயலர் செ. ஸ்ரீநிவாஸன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் நா. சிவபாதசுந்தரம் பிரதம விருந்தினராகவும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

கரணவாய் மூத்தவினாயகர் கோயிலடியில், வலயம்—2 சமுர்த்தி அலுவலகத் திறப்பு விழா பிற்பகல் 12. 10 மணிக்கு வலயம் இரண்டின் சமுர்த்தி முகாமையாளர் இ. கிருஷ்ணராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்குக் கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாஸன் பிரதம விருந்தினராகவும் யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் நா. சிவபாதசுந்தரம், பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

இந்த இரு நிகழ்வுகளிலும் கரவெட்டி பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பு. நடராசா, நிர்வாக அலுவலர் இ. சிவபுண்ணியம், பதவிநிலை உத்தியோகத்தர் ஏ. எம். யோசெப், தலைமையகச் சமுர்த்தி முகாமையாளர் சு. சிவகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். [இ-க-4]

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# பூப்புப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்கலகரமான பிரமாதி வருடம்
பங்குனி மாதம் 24 ஆம் நாள் இன்று (06 - 04 - 2000) வியாழக்கிழமை
பகல் 10-42 மணி முதல் 11-27 மணி வரை வரும் சுபமுகூர்த்த வேளையில்

எமது ஏக புத்திரி திருவளர் செல்வி

## சர்மிளா அவர்களுக்கு

இறையருள் துணை கொண்டு பூப்புப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி க. ஆனந்தராஜா
சிவா (மாமா)

42, கேசாவில் பிள்ளையார் வீதி,
வண்-மேற்கு,
யாழ்ப்பாணம். (75124)

## வன்னி செல்லும்

# மதத் தலைவர்கள் பாதுகாப்பு அனுமதிபெறுவதில்புதுநடைமுறை

கொழும்பு, ஏப்ரல் 6

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்குச் செல்லும் மதத்தலைவர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கும் முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஒருமுறை பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றால் அதனை 3 மாத காலத்துக்குப் பயன்படுத்த முடியும் என்ற நடைமுறை இருந்தது.

ஆனால்தற்போதைய புதிய நடைமுறையின்படி பயணம் செய்யும் ஒவ்வொருவரும் தாம் பயணம்செய்யும் ஒவ்வொருமுறையும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ - 7)

# பிரதேச செயலகம் திறந்து வைப்பு

வடமராட்சி, ஏப்ரல் 6

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக்கு அருகில் புதிதாக 50 லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் இன்று வியாழக்கிழமை சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்படும்.

பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும். (க-86-173)

# யா/ மல்லாகம் மகாவித்தியாலயத்தின் 140 ஆவது வருட நிறைவில் சாதனைகள்

1999 A/L பரீட்சை மூலம் பல்கலைக்கழக அனுமதி முன் எப்போதும் பெற்றிராத அளவிற்கு பல மாணவர்கள் பெற்றுள்ளனர்.
பெறுபேற்று விவரம் வருமாறு:

## கலைப்பிரிவு

| பெயர் | பெறுபேறு | புள்ளி | மாவட்டநிலை |
|---|---|---|---|
| 1. பரஞ்சோதி தங்கேஸ் | A, 3B | 302 | 15 |
| 2. சின்னத்தம்பி சஜீவா | 2A, 2B | 298 | 26 |
| 3. சிவசுப்பிரமணியம் சுரேஸ்சன் | 2A, B, C | 298 | 26 |
| 4. கனகரட்ணம் பிரதீபன் | A, 3B | 290 | 53 |
| 5. துரைராஜா கீதாஞ்சலி | A,2B,C | 286 | 77 |
| 6. கணபதிப்பிள்ளை தமயந்தி | 2A, B, C | 280 | 119 |
| 7. சிவராஜா ராஜி | A,3B | 280 | 119 |
| 8. அப்புத்துரை சுஜேந்தினி | 2A,B,C | 277 | 145 |
| 9. இரத்தினம் விஜயகீதா | A,2B,C | 276 | 161 |
| 10. மதுரநாயகம் சுஜிதா | A,2B,C | 274 | 179 |
| 11. வல்லிபுரம் சாந்தரூபி | 2A,2C | 274 | 179 |
| 12. மகாலிங்கம் சுபைதா | A,B,2C | 270 | 227 |
| 13. கௌரிபாலன் பிரபா | 3B,C | 266 | 297 |
| 14. பாலசிங்கம் சந்தியா | A,2B,C | 265 | 312 |

## வர்த்தகப் பிரிவு

| பெயர் | பெறுபேறு | புள்ளி | மாவட்டநிலை |
|---|---|---|---|
| 15. சுந்தையா திருக்குமார் | 2A,B,C | 282 | 84 |
| 16. சிவனேசன் தர்சாயினி | 2B,C,S | 254 | 289 |

கலைப்பிரிவில் தோற்றிய 23 பேரில் ஆகக் குறைந்த பெறுபேறு 4 S ஆகும்.
வர்த்தகப் பிரிவில் தோற்றிய 13 பேரில் அடிப்படைத்தகுதி பெறாதோர் 3 பேர் மட்டுமே. ஆகக் குறைந்த பெறுபேறு 3 S

**மொத்தம் 36 மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள்**
A -- 21  B — 41  C — 46  S — 29  F — 03

மேலும் இந்து நாகரீகத்தில் 6 மாணவர்கள் A தரத்தைப் பெற்றுள்ளமை வலிகாமம் வலயப் பாடசாலைகள் அனைத்திலும் மிகச் சிறப்பான பெறுபேறாகக் காணப்படுகின்றது.

### தங்கப்பதக்கம்

1999 ஆம் ஆண்டில் சைவபரிபாலன சபையினால் நடத்தப்பட்ட சைவசமய பாடப் பரீட்சையில் 13 ஆம் தரத்தைச் சேர்ந்த செல்வி சின்னத்தம்பி சஜீலா அகில இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். இதுபல வருட காலத்தின் பின் பாடசாலை பெற்ற தங்கப் பதக்கமாகும்.

### விளையாட்டுச் சாதனைகள்

கரப்பந்தாட்டத்தில் 1999 ஆம் வருடத்தில் யாழ். மாவட்டத்தில் 3 ஆம் இடத்தை 17 வயதின் கீழ் பிரிவும், 19 வயதின் கீழ் பிரிவும் பெற்றமை பாடசாலை வரலாற்றில் முதல் தடவை பெற்றபெருவெற்றிகளாகும். 2000 ஆம் ஆண்டிலும் வலிகாமம் வலய மட்டக் கரப்பந்தாட்டத்தில் 17 வயதின் கீழ்ப் பிரிவினர் 2 ஆம் இடத்தையும், 19 வயதின் கீழ்ப் பிரிவினர் 1 ஆம் இடத்தையும் பெற்று யாழ். மாவட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். யாழ். மாவட்டத்தில் இம்முறை பெருவெற்றி பெற வாழ்த்துகின்றோம்.

பாடசாலையின் இவ்வுயர்விற்காக உழைத்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாராட்டுவதோடு புதிய விக்கிரம வருடத்தில் மேலும் பல வெற்றிகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

நன்றி

(75117) பெற்றோர், பழைய மாணவர் சங்கத்தினர்.

# யாழ். மாநகர சபை

## கட்டாக்காலி நாய்களைப் பிடித்தழித்தல் தொடர்பான

# பொது அறிவித்தல்

மாநகரசபைப் பணியாளர் வீதியில் திரியும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்தழிக்கும்பொழுது துரதிஷ்டவசமாகப் பொதுமக்கள் வளர்த்து வருகின்ற வீட்டு நாய்களும் கூட அவ்வப்போது அகப்பட்டுவிடுகின்றன. இது மிகவும் மனவருத்தத்தைத் தருகின்ற ஒரு காரியமாகும். ஆயினும், உயிர் ஆபத்தை விளைவிக்கக் கூடிய விசர்நாய்கடி மற்றும் வீதியில் சிறுவர், சிறுமியர் நாய்களால் விரட்டப்பட்டு விபத்தில் சிக்க நேரிடுதல் போன்ற காரணங்களால் வீதியில் திரியும் நாய்களைப் பிடித்து அழிக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகவுள்ளது. எனினும், பின்வரும் நடைமுறைகளைக் கையாளுவதன் மூலம் வளர்ப்பு நாய்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

1 வளர்ப்பு நாய்களை வீதிக்கு வரவிடாது கட்டி வளர்த்தல்.

2 நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டிருப்பதையும், உரிமம் வழங்கப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்தும் வகையில் சபையால் வழங்கப்பட்ட உரிமத்தகட்டைக் கழுத்தில் தொங்கவிடுதல்.

இவ்வாறான உரிமத்தகடு தொங்கவிடப்பட்டிருக்கும் நாய்கள் கூட வீதிக்கு வந்தால் மாநகர சபைப் பணியாளர்களால் பிடிக்கப்படும். ஆயினும் உரிமையாளர் விரும்பினால் உரிய தண்டப்பணத்தைச் செலுத்தி நாயை மீட்டுக் கொள்ளலாம்.

இவ்விடயத்தில் சகல மக்களினதும் ஒத்துழைப்பைக் கோரி நிற்கின்றோம்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

2000—03—04 [சி/11674]

சாவகா ஜ'வல்லர்ஸ்
சந்தியா மல்ரி கோட்யாட்
ஆதரவில்

ஊன்று கோல்

08.04.2K
சனிக்கிழமை பி.ப 2.30
(இ.நேரம்)
பண்டத்தரிப்பு
மகளிர் கல்லூரியில்
நாடகங்கள்

அக்கினிப் பெருமூச்சு

விளம்பர அனுசரணை:

தரம் நாடுவோர் தவறாமல் நாடுவது
**வாணி பிஸ்கற்**
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

(75130)

---

## தபால்பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 6

நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் சேவைக் கப்பலில் யாழ்ப்பாணத்துக்கான 311தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன. அதேசமயம் குடாநாட்டிலிருந்து வெளியூர்த் தபால்கள் அடங்கிய 90 பொதிகள் இக்கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ-10)

## வீதியில் சென்றவர் மயங்கி வீழ்ந்து மரணம்

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மாநகரசபை ஆயுள்வேத மருத்துவமனைக்கு முன்பாக நடந்து சென்று கொண்டிருந்த சமயம் மயங்கி வீழ்ந்து இறந்ததாகத் தெரிவித்து -பருத்தித்துறையைச் சேர்ந்த - நல்லதம்பி செந்தில்வேல் (வயது53) என்பவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (உ-6-15)

## கலந்துரையாடல்

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களை நிரந்தர சேவையில் சேர்த்துக்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு கோண்டாவில் 'டிப் போவில்' பொது முகாமையாளர் வி.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-109)

## லங்கா சிமெந்து ஊழியர்களின் கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்6

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் கடந்த தைமாதத்துக்குரிய சம்பளக் கொடுப்பனவுகளும் புதுவருடப் பிறப்பை ஒட்டிய பண்டிகைக் கால முற்பணமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 1-30 மணிவரை யாழ். வர்த்தக வங்கிக் கிளையில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

---

# பெயர் மாற்றம்

கூவில் புலோலி தெற்கு, பருத்தித்துறையைச் சேர்ந்தவரும், 775923750V இலக்க தேசிய அடையாள அட்டைக்குரியவருமான நடேசு-வதனபாக்கியம் ஆகிய நான், எனது பெயரை இன்று (06-04-2000) ஆம் திகதி முதல், சகல நடவடிக்கைகளிலும்

**நடேசு-வதனா**

என மாற்றம் செய்கின்றேன்.

கூவில்,
புலோலிதெற்கு,
பருத்தித்துறை.

இங்ஙனம்
**நடேசு வதனா**

(C/11644)

---

# வாழ்த்துகின்றோம்

வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக் களத்தின் இல.857, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனைக் கட்டடத் திறப்புவிழா இன்று வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றோம்.

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**

* யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
* யாழ். மாவட்ட நுகர்ச்சி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
* யாழ். மாவட்டக் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்

(சி/11687)

---

## யாழ்.மாவட்ட கூட்டுறவுத் திணைக்களம் புதுமனைப் பிரவேசம்
## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்மாவட்ட கூட்டுறவுத் திணைக்களம் சொந்த மாடிக் கட்டடத்தில் இன்று வியாழக்கிழமை முதல் இயங்க இருப்பது யாழ்ப்பாணக் கூட்டுறவு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்வு. இம்முயற்சியில் அயராது உழைத்து வெற்றி கண்ட

யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

**திரு.செ.கு.சண்முகநாதன்**

அவர்களையும், இதில் ஒத்துழைப்பு வழங்கிய ஏனைய நல் உள்ளங்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்
பணிப்பாளர்கள், பணியாளர்கள்
வலி.கிழக்கு தென்பகுதி பல.நோ.கூ.சங்கம்
நீர்வேலி.

(C/11689)

---

# 90 ஆவது நாள் சிரார்த்ததின அழைப்பும் அஞ்சலியும்

**திருமதி ஆறுமுகம் பார்வதிப்பிள்ளை**
(நெடுந்தீவு கிழக்கு - ஆயுர்வேத வைத்தியரின் அன்பு மனைவி)

கடந்த 10-01-2000 திங்கட்கிழமை உருத்திரபுரத்தில் இறைபதமடைந்த திருமதி ஆறுமுகம் பார்வதிப்பிள்ளை அவர்கள் ஆறுமுகம் (செட்டிகுளம், வவுனியா), அருட்சகோதரி ஏஸ்தர் (மலேசியா) அவர்களின் அன்புச் சகோதரியும், வைத்தியர் தியாகராஜா ஆறுமுகம் (ஆறுமுகம் வைத்திய நிலையம், அளவெட்டி) அவர்களின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது நினைவாக எமது இல்லத்தில் எதிர்வரும் 09-04-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணியளவில் நடைபெறவுள்ள சிரார்த்த வைபவத்திலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்குபற்றி மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
ஆ.தியாகராஜா (மகன்),
மருமகள், பேரப்பிள்ளைகள்.

6ஆம் வட்டாரம்,
அளவெட்டி.

(சி/11688)

---

## சித்தமருத்துவ மாணவர் மன்றம் அவசர பொதுக்கூட்டம்

காலம்: 07.04.2000 வெள்ளி பிற்பகல் 1.30 மணி
இடம்: துறை மண்டபம்

அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*செயலாளர்,*
சித்தமருத்துவ மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(75141)

---

# புத்தாண்டு மலிவு விற்பனை

புத்தாயிரமாம் ஆண்டில் வெளியான புதுப்புது டிசைன் ஜவுளி வகைகளைப் புன்னகை பூக்கும் விலைகளில் இன்று(06.04.2000) முதல் ஆறு நாள்கள் சாவகச்சேரி வாணி ரெக்ஸ் நிறுவனத்தினரின்

(விசேட விலைக்குறைப்பு விற்பனை)

உடல் எழிலினை எழிலாக எடுத்துக்காட்டும் புதுவித ஆடைத் தெரிவுகளுக்கு

# வாணி ரெக்ஸ்

இல. 10, நவீன சந்தை,
சாவகச்சேரி.

இல.15 மேல்மாடி,
நவீன சந்தை,
சாவகச்சேரி.

தொலைபேசி இல. 070 - 212429.

(C/11682)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது துறையின் விரிவுரையாளர்

**டாக்டர் பொன்.இராமநாதன் M.D.** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பொன்னம்பலம் கனகம்மா**

அவர்களுடைய மறைவினையொட்டி அஞ்சலி செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சித்த மருத்துவ மாணவர் மன்றம்*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(75142)

---

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
04
-
05
-
1950

இறப்பு
09
-
03
-
1997

**திருமதி மகாதேவன் நிர்மலாதேவி**

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி பா.மகேஸ்வரி**

ஆண்டுகள் பல மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில்!

சம்பியன் லேன்,
கொக்குவில்.

(75150)

*குடும்பத்தினர்.*

---

# மரண அறிவித்தல்

## திருமதி நீலாம்பிகை குலத்துங்கம்

உடுவில் கிழக்கில் வசித்தவரும் தற்போது வவுனியா உக்கிளாங்குளத்தில் வசித்தவருமாகிய திருமதி நீலாம்பிகை குலத்துங்கம் அவர்கள் 05-04-2000 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுஸ்லி (பிரான்ஸ்), ஜெயசிறி (கனடா), கௌரி (வவுனியா), வசந்தன் (நோர்வே), தேவகி (பிரான்ஸ்), பாஸ்கரன் (நோர்வே), ஸ்கந்தராஜா (பிரான்ஸ்), ரேணுகா (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணசிங்கம் (பிரான்ஸ்), நித்தியானந்தன் (கனடா), நந்தகுமார் (வவுனியா), அம்பிகாதேவி (நோர்வே), மகிழ்ராஜ் சிங்கம் (பிரான்ஸ்), கவிதா (நோர்வே) ஆகியோரின் மாமியாரும், அனோசன், அபினா, வதுசா, குமரன், வதுசன், மெலனிகா, மதீசன், திவ்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06-04-2000) வியாழக்கிழமை உக்கிளாங்குளத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் உக்கிளாங்குளம் இந்து மயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி.குலத்துங்கம்
(ஓய்வுபெற்ற லிகிதர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

*இல.99, உக்கிளாங்குளம்,*
*வவுனியா.*

*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

(சி/11690)

# IBMS

**Insititute of Business Management Studies**

**ஆசிரியர்களுக்கான விடுமுறைக்கால சிறப்புக் கணனிப் பயிற்சி**

மேற்படி பயிற்சிநெறி 10.04.2000திங்கட்கிழமை ஆரம்பமாகும். இதுவரை பதிவினை மேற்கொண்டவர்கள் 08.04.2000 இற்கு முன்னர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு நேரசூசியைப் பெற்றுக்கொள்ளவும். இப்பயிற்சிநெறியில் இணைய விரும்புபவர்கள் 08.04.2000 இற்கு முன்னர் தமது பதிவினை மேற்கொள்ளவும்.

**Module exam For D.M.S.O 1**
**Module: Ms Word**
**Time: 08.04.2000 (9.30 a.m)**
**Place : Jaffna Hindu Ladies College**

*IBMS*
*No.701,K.K.S Road*
*Jaffna.*

**Director.**

(C/11691)


## தவறிவிட்டது

**இணுவில் ஆஸ்பத்திரிக்கும் மருதனார்மடச் சந்திக்கும் இடையில் நேற்றைய தினம் ஒரு தொகைப்பணம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ச.தனபாலசிங்கம், இணுவில் ஆஸ்பத்திரி (முன்பாக) என்னும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

(C/11693) *ச.தனபாலசிங்கம்.*


※ ஆடவர் ※ மங்கையர் ※ சிறியோர்களுக்கான ரெடிமேட் ஆடைகளை வேறு எங்கும் காணமுடியாத அளவில் வெளிநாடுகளில் இருந்து புதுப்புது டிசைன்களில் மலையெனக் குவித்துள்ளோம்.

சந்தேகமில்லாமல் தேர்ந்த ரசனையாளருக்கு உங்கள் ரசனையின் புதிய எல்லையைத் தொட இது எங்களின் நுழைமுகம்.

# சங்கமம் ரெக்ஸ்

(ஜனரஞ்சகமான ஜவுளி மாளிகை)
54A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம். (சி-11678)


## சீருடை விநியோகம்

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கான இலவசச் சீருடை விநியோகம் இன்று காலை 9மணிமுதல் வலய அலுவலகத்தில் வைத்து மேற்கொள்ளப்படும்.


**வீடியோ CD வெளியீடு**

சுரேஸ் கோபி, சங்கீதா நடித்த
❊ க்ரைம் ஃபைல்
வினோத்குமார் நடித்த
❊ ரவுடி ஆண்ட MLA
பிரகாஷ்ராஜ் நடித்த
❊ குருபிரம்மா
பிரதிகள் உடன்பெறலாம்

***விஷ்னு வீடியோ***
**K.K.S. RD.**
**கோண்டாவில்.**
(75153)

**எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்**

❊ பிரகாஷ்ராஜ் - கீர்த்திரெட்டி
*குரு பிரம்மா*
❊ சுரேஷ்கோபி - சங்கீதா
*க்ரைம் ஃபைல்*
ஐங்கரன் வீடியோ CD
*பாட்டுத்தான் புதுப்பாட்டுத்தான்*
(கண்ணுக்குள் நிலவு - வானத்தைப் போல - போன்ற புதிய பாடல்கள்)
பிரதிகள் உடன் பெற்றுக் கொள்ளலாம்

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்
(C/11692)

**ஈசன் கல்வி நிலையம்**
**கே.கே.எஸ் வீதி - கோண்டாவில்.**

**கணக்கீடு**
**திரு:பாலவாசன்**
**A/L 2001**
**மெகா மெகா விழா**
ஆரம்பம்:-08-04-2K (சனி)
4.00p.m
(75090)



*Sale!* **இதோ!** *Sale!!*
*முந்துங்கள்*

உள்ளம் துள்ளும் புதுவருடப்பரிசு

# மகாநதி

**வழங்கும்**
**மாபெரும் அதிரடி சிறப்புத் தள்ளுபடி**
இத்தள்ளுபடி 13-04-2000வரை மட்டுமே!
நதிகளின் சங்கமம் கடலில்
சகலவித புடைவைகளின் சங்கமம்
▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲ **மகாநதியில்** ▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲
புதிது புதிதாகப் பூத்திருக்கும்
புதுவருட புடைவைகளுக்கு
*ஆம்*

# மகாநதி புடைவை அகம்

முகூர்த்தப்பட்டுப் புடைவைகளுக்கு
கைராசியான நிறுவனம்

**16,நவீன சந்தை,**
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி இல.021-2552

**4,நவீன சந்தை**
**சாவகச்சேரி.**
**2243**

சாறி பிளவுஸ் பீஸ் துணி வகைகளுக்கு
பிரத்தியேக காட்சி அறைகள்

15,நவீன சந்தை,
(மேல் மாடி)
யாழ்ப்பாணம்.

IKUF,நவீன சந்தை
(மேல்மாடி)
சாவகச்சேரி.

(C/11679)


# யாழ். சிறைக் கைதியின் மரணம் குறித்து சந்தேகம்

யாழ்.சிறைச்சாலையில் கடந்த ஞாயிறன்று உயிரிழந்த நவரத்தினம் என்ற கைதியின் மரணம் தொடர்பாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து சடலத்தை மேலதிக விசாரணைகளுக்காகக் கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா பொலீஸாருக்கு நேற்று உத்தரவிட்டார்.

மேற்படி மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கை யாழ்.சட்டவைத்திய அதிகாரியினால் நேற்று யாழ்.நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்தே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த மரணத்துக்குத் தலையில் ஏற்பட்ட காயம் மற்றும் கழுத்தில் ஏற்படுத்தப்பட்ட நெருக்குதல் என்பனவும் காரணமாகியிருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவித்த சட்டவைத்திய அதிகாரி மேலதிக ஆய்வுகள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியினால் மேற்கொள்ளப்படல் வேண்டும் என நீதிமன்றில் தெரிவித்தார். அதை ஏற்று நீதிமன்றம் உத்தரவிட்டது. (உ-7)

## வேம்படி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| வட இந்து மகளிர் | 01 | 03 | 01 |
| யாழ் இந்து மகளிர் | 01 | 03 | 04 |
| யாழ்ப்பாணக் கல்லூரி | 03 | 01 | 03 |
| மானிப்பாய் மெமோறியல் | - | - | 01 |
| சென்.ஹென்றீஸ் | - | 01 | - |
| யூனியன் கல்லூரி | - | 03 | 01 |
| மானிப்பாய் இந்து | - | - | 02 |
| யாழ்.கொண்வென்ட் (ஆங்) | 02 | - | 01 |
| உடுப்பிட்டி அ.மி.பா. | - | 01 | 01 |
| மகாஜனா | 02 | 02 | 03 |
| யாழ்.சென் ஜோசப் | - | 01 | - |
| உடுவில் மகளிர் | 01 | 01 | 04 |
| கொக்குவில் இந்து | 01 | 01 | 05 |
| ஹாட்லி | 02 | 06 | 07 |
| அத்தியார் இந்து | - | 01 | - |
| ஸ்கந்தா | - | 01 | 02 |
| ஆவரங்கால் நடராஜா இ.வி | - | - | 01 |
| வட்டு. இந்து | - | - | 03 |
| சென்.ஜோன்ஸ் | 02 | 04 | 08 |
| சென்.பற்றிக்ஸ் | - | 03 | 04 |
| கரவெட்டி ஞானசாரியார் | - | - | 01 |
| வட மத்திய மகளிர் | 01 | - | 01 |
| கரவெட்டி விக்கினேஸ்வரா | 01 | 01 | 01 |
| நெல்லியடி ம.ம.வி. | 02 | 02 | - |
| பருத்தித்துறை மெதடிஸ் | - | 04 | 02 |
| விக்டோரியா | 01 | - | - |
| புத்தூர் சோமஸ்கந்தா | - | 01 | - |

இந்த அட்டவணை முற்கொண்டு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் வேலாயுதம்

அச்சுவேலி பயித்தோலையை பிறப்பிடமாகக் கொண்டு தற்போது ஆஸ்திரேலியாவில் வசித்தவருமான ஆறுமுகம் வேலாயுதம் நேற்று (05-04-2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசுவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருந்தவநாதன், தவநாயகி - நடராசா(ஆஸ்திரேலியா) சிவபாலன்(ஆஸ்திரேலியா) விஜயநாயகி - ஜெயானந்தம்(சுவீடன்) சாந்தநாயகி - கிருஸ்ணமூர்த்தி(ஆஸ்திரேலியா) சிவனேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2000) வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*Mrs.T.Nadarajah,*
*15,Cooke Street,*
*Clayton(vic) 3168,*
*Australia.*

தகவல்:
**வ.சின்னத்தம்பி**

(75152)

## பொ.திருஞானசம்பந்தன்

(மேகலா ரேடர்ஸ், சுன்னாகம்)

வரியப்புலத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொ.திருஞானசம்பந்தன் (மேகலா ரேடர்ஸ், சுன்னாகம்) அவர்கள் 05.04.2000 புதன்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் சசிகலா, மேகலா (சுவிஸ்), கோகிலா ஆகியோரது பாசமிகு தந்தையும் புவனேந்திரராஜா(C.E.B. சுன்னாகம்), பிரேமிலன் (சுவிஸ்) ஆகியோரது மாமனாரும், மதுஷா, டிலக்ஷன், சிவாந்தி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வரியப்புலம்,
சுன்னாகம்.

பொ.புவனேந்திரராஜா
(மருமகன்)

(75136)

## தம்பையா சிவபாக்கியம்

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிவபாக்கியம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும் அரசநாயகம், கணேசு (DO,விவசாயத்திணைக்களம், திருகோணமலை), தியாகராசா, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும், கமலம், திலகம், காலம்சென்ற தியாகராஜா, ஆகியோரின் மாமியாரும், குகன், சுதன், நித்தியா, கார்த்திகா, சத்தியரூபன்(U.K), சத்தியநேசன், லூதர் சத்தியேந்திரன், வனஜா(ஆசிரியை, திருகோணமலை), யோகனதாஸ், பிரதாஸ் ஆகியோரின் பேர்த்தியும் தம்பிமுத்து, சரஸ்வதி துரைச்சாமி பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும், பகவதியின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(06-04-2000) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் யாழ்.செம்மணி மாயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
26/3 சோமசுந்தரம் லேன்,
சுண்டுக்குளி.

பரிமளம்
(சகோதரி).

(75154)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.